# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 30 | பிப்ரவரி 1966 | இதழ் 2 |
|---|---|---|



# புதிய பிரதமர்

இந்திய வரலாற்றில் ஒரு புதிய பொன்னேடு; காலக் கொடுமையினால் மறைக்கப்பட்ட ஓர் உன்னதமான அத்தியாயத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டுவிட்டது. ஆம்; பாரதம், பெண்குலத்துக்கு அளிக்கும் ஈடற்ற மதிப்புக்கு ஒரு கலங்கரை விளக்கமாக பாரதப் பிரதமராக திருமதி. இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தருணத்தில், 'பிரதமர்' பதவி என்பது எளிதான ஒன்றல்ல. பல்வேறு இக்கட்டான பிரச்சினைகளைச் சமாளித்துத் தீர வேண்டிய மிகப் பயங்கரமான சிம்மாசனமாகும். எனவே, இந்தச் சோதனை நிரம்பிய வேளையில் எதையும் சமாளிக்கும் திடநம்பிக்கையோடு பாரத பிரதமராகப் பதவியேற்றிருக்கும் திருமதி. இந்திரா காந்தி அவர்களை மனமுவந்து வாழ்த்துகிறோம்.

நம்முடைய இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரு. டாக்டர் இராதாகிருஷ்ணனேயாவார். ஆனால், எந்த ஒரு காரியத்துக்கும், நிர்வாகக் கட்டத்துக்கும், அவ்வப்போது தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகளுக்கும் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்களே பொறுப்பாவார். ஆகவே அவரது சீரிய தலைமையால்—அயராத உழைப்பால்—தெளிவான சிந்தனையால் பாரதம் மேலும் பலவகைகளில் வளம்பெற்றுத் திகழும் என்னும் முழு நம்பிக்கையோடும், பொறுப்பான கட்டத்தை, மிகப் பொறுப்பு வாய்ந்த தருணத்தில் ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட பூரிப்போடும் பாராட்டுகின்றோம்.

ஆம்; இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு மூன்றாவது பிரதமராக பதவி ஏற்றிருக்கிறார். பண்டித மோதிலால் நேருவின் மகனார் ஜவாஹர்லால் நேரு வகித்த பதவியை—ஆரம்ப ஆசிரியரின் புதல்வர் லால்பகதூர் சாஸ்திரி ஏற்றிருந்த பதவியை—வாக்கெடுப்பின் மூலமாக வெற்றிபெற்று, அப்பதவியை அடைந்திருக்கும் திருமதி. இந்திரா, வயதில் இளையவரென்றாலும் அவரது கடந்த கால அனுபவம் முதுமையின் சாயலை எட்டிப்பிடித்த ஒன்றாகுமென்பது யாருக்குமே தெளிவாகத் தெரிந்த ஓர் உண்மையாகும்.

இப்பொறுப்பான பதவியை முன்பு ஏற்றிருந்த பண்டித நேருவும் லால்பகதூர் சாஸ்திரியும் இறக்கும் தருவாயிலும் இந்தியாவின் நன்மைக்காக தம்மைத் தாராளமாக அர்ப்பணித்துக் கொண்டு உழைத்தார்கள். நிர்வாகத் துறையிலும், எதிர்பாராமல் வந்து சந்திக்கும் பிரச்னைகளைச் சமாளிப்பதிலும், நடுநாயகமாக செயலாற்றுவதிலும், சமரசம் காணும் ஆர்வத்திலும் வல்லவர்களாயிருந்தார்கள். அப்படிப்பட்ட வல்லமையை, அவரது தந்தையின் காலத்தில் அவரோடு அல்லும் பகலும் நீங்காது இருந்து, எல்லாவிஷயங்களையும் கண்கூடாகக் கண்டதின் மூலம் பெற்றிருப்பாரென்று நாடும் நாமும் எதிர்பார்க்கிறோம். அதுமட்டுமல்ல...

திருமதி. இந்திரா காந்தி அப்பழுக்கற்ற பாரம்பரியத்தில் பிறந்தவர்; தேச நலனை தம்முடைய நலமாகக் கருதி நாளும் உழைத்த குடும்பத்தில் அவதரித்தவர்; மனிதர்குல மாணிக்கத்தின் அபிமானத்துக்குரிய ஒரே மகளார்; 1936இல் தமது அன்னையான கமலா நேரு காலமானதிலிருந்து தம் தந்தை ஜவாஹர்லால் நேருவின் கண்காணிப்பிலேயே வளர்ந்தவர்; இளமை முதற்கொண்டே அரசியல் சூழலில் பழகியவர்; ஸ்விட்ஜர்லாந்திலும் ஆக்ஸ்போர்டு

பல்கலைக் கழகத்திலும், தாகூரின் சாந்திநிகேதனத்திலும் முறையாகப் பயின்றவர்; 1947இல் இந்தியா—பாகிஸ்தான் பிரிவினையையொட்டி, கல்கத்தாவில் அதிதீவிரமாக நடந்து கொண்டிருந்த கலவரத்தை காந்திஜியின் அன்புக் கட்டளைக்கிணங்க நேரில் சென்று பார்த்தவர்; 1959-60இல், அதாவது, பாரத பிரதமராக நேருஜி விளங்கிய காலத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக விளங்கியவர்; 1962இல் சீன ஆக்கிரமிப்பு நடந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த நமது வீரர்களை நேரில் கண்டு அவர்களுக்கான வசதிகள் ஏற்பட பாடுபட்டவர்; தம்முடைய ஒப்பற்ற தந்தையுடன் உலகப் பயணம் நடத்தியவர்; 1964இல் செய்தி ஒலிபரப்பு அமைச்சராகப் பணியாற்றியவர்; ஆம்; இப்படிப் பல்வேறு துறைகளில் நிகரற்று விளங்கிய ஒருவரைப் பெற்றிருக்கும் நாம், அவரது தலைமையால் நல்ல ஒரு சுபீட்சத்தை மேலும் பெறமுடியும் என்ற உறுதி நமக்கு மட்டுமல்ல, தேசத்துக்கே உண்டு. இதற்குக் காரணம் நேரு பாரம்பரியத்தின் மீது தேசமக்களுக்குள்ள அழுத்தமான நம்பிக்கைதான். இந்த நம்பிக்கையை வலிவுபடுத்துவதுபோல தினமணி நாளேடு தன் தலையங்கத்தின் வாயிலாக தீட்டிக்காட்டியுள்ளது. அதாவது,

'நேரு குடும்பத்தின் மீது தேசத்துக்கு எப்போதுமே உணர்ச்சி கலந்த அபிமானம் உண்டு. இந்திரா காந்தியைவிட நிர்வாக அனுபவமும், சட்டமன்ற அனுபவமும் மிக்கவர்கள் வேறு பலர் இருப்பினும், மற்றவர்களுக்கு மெஜாரிட்டி தேடுவது சுலபமாக இருந்ததற்கு அவர் நேருஜி குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் ஒரு காரணமாகும்!' என்று குறிப்பிட்டிருந்தது.

உண்மையும் இதுதான்...திருமதி. இந்திரா காந்தியைவிட வயதிலும், அரசியல் நுணுக்கத்திலும், நெடுங்கால அனுபவத்திலும் ஆழ்ந்த தேசபக்தியிலும் சிறந்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆயினும் நேருஜியின் மீது, அவரது குடும்பத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதால்தான், 'கடைசிவரையில் வாபஸ் பெறமாட்டேன்!' என்று உடும்புப்பிடி பிடித்துக் கொண்டிருந்த மொரார்ஜி தேசாய்க்கு எதிராக ஓட்டுக்களை வழங்கி வெற்றி மகுடத்தைச் சூட்டியுள்ளார்கள். இம்மகுடத்துக்குள் அடங்கியுள்ள மகத்தான நிர்வாகப் பொறுப்புக்களை உணர்ந்து செயலாக்கத்தில் ஈடுபடுவாரென்று நாடு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இப்புதிய தலைவாசலில் இன்னொன்றையும் நாம் நினைவு படுத்தியாக வேண்டும். திருமதி. இந்திராகாந்தி, இதற்குமுன் எப்படியும் இருந்திருக்கலாம்; எந்த ஒரு குறிக்கோளுக்காவது தீவிரமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் இனி அப்படிப்பட்ட பாகுபாடோடு நிச்சயம் இருக்க முடியாது: இருக்கவும் மாட்டார் என்கிற நம்பிக்கை நமக்குண்டு. பொதுவாக, ஏன், சிறப்பாக வலிவு குன்றிய ஒரு நாட்டில் நாட்டுப்பற்று என்பது, இடதுசாரி' என்கிற பாதையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஒன்று என்றாலும், 'இடது-வலது' என்கிற பிரிவுகளும், ஆணித்தரமான தத்துவ முத்திரைகளும் பொருளியல் துறையில் செழிப்புப் பெற்றுள்ள தேசங்களுக்கே உரியதாகும். திருமதி. இந்திரா முன்னதுக்கு உரியவர் என்ற வதந்தி இருப்பினும், இனி, வறண்ட தத்துவவாதங்களுக்கு முக்கியத்துவம் வழங்காமல் காரிய வெற்றிக்கு முதலிடம் அளித்து ஆவன செய்ய வேண்டும் என்ற தீர்க்கமான தரிசனத்தை அரசியலில் நல்ல தெளிவு பெற்றிருக்கின்ற யாருமே மறுக்க முடியாது. எனவே, 'பிரதமர்' பதவியையும், அப்பதவிக்கு வந்துள்ள 'இந்திரா காந்தி' யையும் இணைத்துப் பார்ப்பவர்கள் கீழ்க்கண்ட வற்றைத்தான் நிச்சயம் எதிர்பார்க்க முடியும்.

1. நேருவின் கொள்கையும், அவரது அயராத—நடுநிலை பிறழாத-சமாதான வேட்கையும்.

2. காலஞ்சென்ற பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கு இருந்த நேர்மையான—நிதானமான—தெளிவான ஒரு மனப்பான்மையும் செயலாக்கமும்.

3. ஆளும் கட்சிக்கு வழங்கப்படும் ஆதரவை அக்கட்சிக்கு எதிராயுள்ள பிறகட்சிகளின் எண்ணங்களுக்கும் குறைவின்றி மனப்பூர்வமாக ஆதரவு அளித்தல்.

—ஆக, இம் மூன்றையும் திருமதி. இந்திரா காந்தி தம்முடைய நெஞ்சில் ஏற்றிப் போற்றிச் செயல்படுவாரானால் தேசமக்களின் நல்லுணர்வைமட்டுமல்ல, உலகநாடுகளின் நல்லுணர்ச்சியோடு ஆதரவையும் பெற்று பொறுப்புக்களை எளிதாகச் சமாளிக்க இயலும்.

"எளிய வாழ்க்கை, ஆடம்பரமின்மை முதலிய விஷயங்களில் இந்திரா முழுவதும் தன் தாய் கமலாவைப் போலவே இருந்து வருகிறாள்!" என்று நேருஜி புகழ்ந்த நமது பிரதமருக்கு வாழ்த்தினை வழங்குவதோடு, நாட்டின் மூல பிரச்னைகளை எளிதாக சமாளிக்க அவரோடு இணைந்து நிற்பவர்கள் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறோம்.

# தை பிறந்தால்

(கி. வா. ஜகந்நாதன்)

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது பழமொழி. “தையும் பிறந்தது; தரையும் குளிர்ந்தது” என்பது ஒரு நாடோடிப் பாட்டின் பல்லவி. ‘தைமாதத்தில் உத்தராயணம் பிறக்கிறது; உத்தராயணம் புண்ணிய காலம்; அதனால்தான் தை மாதப் பிறப்புக்குச் சிறப்பு’ என்று ஒரு வகையில் காரணம் கூறுவார்கள். தமிழ் நாட்டின் மூலை முடுக்கில் வாழும் மக்கள் கூட இந்தப் பழமொழியை அறிவார்கள். ஆனால் அவர்களுக்கு உத்தராயணமும் தெரியாது; தட்சிணயனமும் தெரியாது.

அப்படியானால் தை மாதம் பிறந்தால் என்ன வழி பிறக்கும்? சிற்றூரில் வாழும் மக்கள் ஆடிப் பட்டம் தேடி விதைக்கிறவர்கள். பழங்காலத்தில் இந்த நாடு முழுவதுமே வேளாண் தொழில்தான் சிறந்து நின்றது. எங்கே பார்த்தாலும் வயல்களும் தோட்டங்களும் நன் செய்யும் புன் செய்யுமாகக் காட்சியளித்தன. நிலம் என்றாலே பயிரிடும் பூமி என்று பொருள் செய்தார்கள். அந்த நிலத்தில் உழைத்துப் பயிரிட்டார்கள். ஆற்றிலிருந்தும் கிணற்றிலிருந்தும் ஏரியிலிருந்தும் பாய்ந்த தண்ணீரோடு, அவர்கள் உழைப்பினால் நெற்றி வேர்வையும் நிலத்தில் விழுந்து நிலத்தைப் பொன்னாக்கின. அவர்கள் செய்த முயற்சிக்கெல்லாம் பயன் தை மாதத்தில் கிடைக்கிறது. ஏர் முனையில் அவர்கள் பட்ட பாட்டுக்குரிய வெற்றி தை மாதம் அறுவடையிலே கிடைக்கிறது. அதுகாறும் எப்படியோ முண்டியடித்துப் பணத்தையும் உடலத்தையும் உழைப்பையும் வழங்கச் செய்த முயற்சிகளுக்குப் பயன் கிடைக்கிறது. அவர்கள் தம் உழைப்பின் பயனை நுகர்வதற்கு என்ற வழி பிறக்கிறது. இது வரைக்கும் வயலில் தோன்றி தளர்ந்து தேங்கியிருந்த செல்வம், இப்போது வீடு தேடிக் கொண்டு செல்கிறது. அதற்குரிய வழி பிறக்கிறது.

## உணவுக்கு வழி

இதை எண்ணியே தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி தோன்றியது. உணவு இல்லாவிட்டால் எந்த வளம் இருப்பினும் பயன் இல்லை. மாளிகை இருந்தாலும், ஆடையணியிருந்தாலும், பண்டம் பல இருந்தாலும் உணவு இல்லாவிட்டால் பயன் இல்லை. உயிர் இல்லாமல் உடம்பு மட்டும் இருப்பது போன்றது அது. உயிரை அளிப்பது உணவுதானே!

“உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே”

என்று மணிமேகலை கூறுகிறது. அந்த உணவுக்கு வழி பிறக்கிறது

தை மாதத்தில்.

தை மாதம் வழி பிறக்க வேண்டுமானால், அதற்கு முன்பே வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். மற்ற எந்த முயற்சி சிறந்தாலும், கல்வி சிறந்தாலும், உணவுக்குரிய முயற்சி இல்லையேல் வழி பிறக்காது. உணவு வந்தால் உயிரும் உடம்பும் ஒன்றி நிற்கும். எந்த வேலையையும் செய்யலாம். அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

## பசி, பிணி, பகை

ஆகவே ஒரு நாட்டின் வளத்தை மதிப்பிட வேண்டுமானால், அங்கே உண்டாகும் உணவு வளத்தைப் பார்க்க வேண்டும். நாட்டுக்குத் தீங்கு பயப்பவை மூன்று ; பசியும் பிணியும் பகையும் ஆகிய மூன்று. இந்த மூன்றில் பிணியும் பகையும் எப்போதேனும் வருபவை. பசியோ ஒவ்வொரு நாளும் வருவது ; ஒவ்வொரு வேளையும் வருவது. அதைப்போக்கி வெற்றி கொள்ள வேண்டுமானால் ஏர் முனை சிறக்க வேண்டும். ஏர்க்களத்தில் போர் சிறக்கவேண்டும். ஏரால் உழும் முயற்சி நன்கு அமைந்தால் பிறகு அறுவடையும் உணவும் உண்டாகும்.

ஏர் முனையில் சிறக்கும் நாடே வளம் நிறைந்த நாடு. பிற நாட்டை எதிர் பாராமல் தனக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்வதுதான் நல்ல நாடு.

**"நாடென்ப நாடா வளத்தது"** என்று திருவள்ளுவர் கூறுவர்.

தமிழ்க் காவியங்களில் எடுத்தவுடனே கதையைத் தொடங்க மாட்டார்கள். நாட்டு வளம், நகர வளம் என்னும் இரண்டையும் முன்னாலே பாடுவார்கள். அதற்குப் பிறகே காவிய நாயகனைப் பற்றிச் சொல்லப் புகுவார்கள். நாட்டு வளம் பாடும்போது அதன் எழிலையும் சமுதாயத்தின் பெருமையையும் பாடினாலும், எடுத்தவுடன் ஏர் முனையைத்தான் பாடுவார்கள். வேளாண்மையை ஆதி முதல் அந்தம் வரையில் வருணிப்பார்கள். மேகம் மழை பொழிவது, உழவர்கள் வயல்களை உழுவது, நீர் பாய்ச்சுவது, விதைப்பது, களை எடுப்பது, பயிர் விளைவது, பிறகு அறுவடை செய்வது, களத்தில் அடிப்பது, போர் போடுவது, வீட்டுக்கு நெல்லைக் கொணர்வது என்று உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் விரிவாகச்சொல்வார்கள். மனிதர்களுடைய கதையானாலும், தெய்வங்களுடைய கதையானாலும் நாட்டு வளம் கூறும் போது ஏர் முனையைப் பற்றிய காட்சிகளை விரித்துரைக்காமல் இருக்கமாட்டார்கள்.

## காப்பிய மரபு

தமிழில் உள்ள பழைய காப்பியங்கள் ஐந்து என்று ஒரு வழக்கு உண்டு. அதில் ஒன்றாகிய சீவக சிந்தாமணியே நாட்டு வளம், நகர வளம் என்பவற்றோடு தொடங்கிய காப்பியங்களில் முதலாவது. அதில் ஏமாங்கத நாட்டின் வருணனை வருகிறது. சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்க தேவர் அந்த நாட்டின்

பெயரைச் சொல்லும் போதே அதன் நிலவளத்தையும் குறிப்பிடுகிறார்.

அந்த நாட்டில் எங்கே பார்த்தாலும் தோட்டங்களும் வயல்களும் நிரம்பியிருக்கின்றன. மாதிரிக்கு ஒரு தோட்டத்துக்குள் நம்மை அழைத்துச் செல்லுகிறார் திருத்தக்க தேவர். நெடுந்தூரத்திலிருந்து வரும்போதே அங்கே ஓங்கி நிற்கும் தென்ன மரங்கள் கண்ணில் படுகின்றன. குலைகுலையாகக் காய்களைத் தாங்கிக் கொண்டு அவை நிற்கின்றன. இன்னும் சற்றே நெருங்கினால் அவற்றை விடச்சிறிதே உயரத்தில் குறைந்த கமுக மரங்கள் தெரிகின்றன. இந்தச் சோலைக்கு உள்ளேயே புகுந்து விடுகிறோம். அதோ பலா மரங்கள், மா மரங்கள் கொத்துக்கொத்தாகப் பழங்களைச் சுமந்து கொண்டு நிற்கின்றன. அருகே வாழை மரங்கள் பழுத்து விளங்குகின்றன.

## மணமும் பசையும்

சோலையில் நம்மை நிறுத்திய பிறகு திருத்தக்க தேவர் ஒரு மாயம் செய்கிறார். மரங்களின் எழிலைக் கண்டு நிற்கும் நம் கண் முன் ஒரு புதிய காட்சி விரிகிறது. தென்னை மரத்திலிருந்து பழுத்த காய் ஒன்று விழுகிறது. அது கீழே உள்ள கமுக மரத்தில் விழுந்து தாக்கி அதில் கட்டியிருந்த தேனடையைக் கீறிவிடுகிறது. பெரிய தேங்காய் அது; காயா? பழுத்த பழம்; ஆமாம்; தெங்கின் பழம்தான். கமுகின் உச்சியிலுள்ள தேனடையைக் கீறிஇறங்கிய தேங்காய் பலாமரத்தில் விழுகிறது. அதில் கனிந்து முதிர்ந்த பலாப் பழத்தைப் பிளக்கிறது. பின்னும் அது கீழே செல்கிறது. மாமரத்திலுள்ள கனிகளைப் பதம் பார்க்கிறது. பழுத்த குலையை ஏந்திக் கொண்டு நிற்கும் வாழை மரத்தின் மேல் விழுந்து வாழைப் பழங்களை உதிர்த்துவிட்டுக் கீழே பொத்தென்று விழுகிறது. அதை எடுத்துப் பார்த்தால் அது பழுத்த தெங்கின் பழம் என்று தெரிகிறது. இன்னும் கூர்ந்து மோந்து பார்த்தால் கமுக மரத்தில் உள்ள தேன் மணக்கிறது; பலாப் பழத்தின் வாசனை வீசுகிறது; மாம்பழத்தின் சாறு மணக்கிறது; வாழைப் பழத்தின் பசையில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. படிப்படியாக உள்ள மரங்களில் தட்டித் தட்டி இறங்கிய அதன் பயணத்தை இந்த மணமும் பசையும் தெரிவிக்கின்றன. அத்தனை வளமுடைய தோட்டங்களை உடையது ஏமாங்கதநாடு. இப்படி ஒரு நாடு இருந்தால், அதன் புகழ் நாலு திசைகளிலும் சென்று படாதா? 'இது ஏமாங்கத தேசத்துத் தேங்காய்,' 'இது ஏமாங்கதத்தின் மாம்பழம்!' என்று கொண்டாரும் உண்டாரும் பாராட்டிப் பேசுவது வழக்கந்தானே?

"காய்மாண்ட தெங்கின்
பழம்வீழக் கமுகின்
நெற்றிப்
பூமாண்ட தீந்தேன்

தொடைகீறி வருக்கை
போழ்ந்து
தேமாங் கனிசிதறி
வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென்று
இசையால் திசைபோய
துண்டோ?"

[காய்மாண்ட—காயால் சிறப்படைந்த, தெங்கின் பழம்—முதிர்ந்த தேங்காய், நெற்றி—உச்சி, பூமாண்ட—பூவினால் சிறப்படைந்த, தொடை—அடுக்காக உள்ள தேன் அடை, வருக்கை—பலாப் பழத்தை, போழ்ந்து—பிளந்து, திசை போயது—திசையெல்லாம் பேர்போன.]

## களிறுமாய் கழனி

இப்படித் தொடங்கி, மேகங்கள் சக்கரவர்த்தியின் யானைக் கூட்டங்களைப் போல் கடலை மேய்ந்து வந்து, சிவ பிரான் சடையைப் போல மின்னி மலைகளையடைந்து முழங்கிய செய்தியைச் சொல்கிறார். பின்பு மழை பொழிகிறது. ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. வெள்ளத்தைக் கண்டு உழவர்கள் கூடுகிறார்கள். உழத்தியரும் வருகிறார்கள். உழவு நடை பெறுகிறது. வித்திடுகிறார்கள். பயிர் வளர்கிறது. களையெடுக்கிறார்கள். பயிர் வளர்ந்து ஓங்கி நிற்கிறது.

சிறிதளவுகூட நிலத்தை வீணாக்காமல் பயிரிடுகிறார்கள். 'மீன் கண் அளவுகூடப் பாழிடம் இல்லை'யாம். கரும்பு ஓங்கி வளர்கிறது. யானை சென்றால் அதை மறைக்கும் அளவுக்கு இருக்கிறது பயிரின் வளர்ச்சி. "களிறுமாய் கழனி" என்கிறார் ஆசிரியர்; 'களிற்றை மறைக்கும் கழனி' என்பது பொருள்.

பயிர் விளைந்து அறுவடை நடக்கிறது. பொற்குன்றத்தைப் போல நெல்லைக் குவிக்கிறார்களாம்.

"சேகுறக் கூப்பிய
செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும்பொனின்
குன்றம் ஒத்தவே"

என்று பாடுகிறார் திருத்தக்க தேவர்.

கம்பராமாயணத்திலும் இத்தகைய காட்சிகள் வருகின்றன.

கம்பர் காட்டும் நாட்டில் தை மாதம் பிறக்கிறது. வேளாளர் தம் உழைப்பின் பயனை நாட்டுக்கு நலம் செய்யத் தொகுக்கிறார்கள். அங்கங்கே வயல்களில் உழுது நெல் முதலியவற்றைப் பயிரிட்டிருக்கிறார்கள். பலர் தோட்டங்களை வளர்த்திருக்கிறார்கள். மரங்களையும் கொடிகளையும் வளர்த்திருக்கிறார்கள். புன்செயிலும் துவரை முதலியவற்றைப் பயிர் செய்து பயன் எடுக்கிறார்கள்; அவற்றையெல்லாம் இப்போது தொகுக்கிறார்கள். அறுத்தும் பறித்தும் கொய்தும் குவிக்கிறார்கள். பூக்களில் வண்டுகள் தேனை எடுத்துத் தொகுத்து வைப்பது போலக் குவிக்கிறார்கள். வண்டு தேன் முழுவதையும் தானே உண்பதில்லையே! இவர்களும் தம்

உழைப்பால் பெற்றவற்றைப் பிறரும் கொள்ளும்படி கொண்டு வருகிறார்கள்.

## தையும் வழியும்

அவர்கள் கொண்டு வந்து குவித்திருப்பவற்றை, தைபிறந்தது. வழியும் பிறந்தது என்பதற்கு அடையாளமாகக்கொண்டு வந்து சேர்த்தவற்றை சற்றே பார்க்கலாம்.

இதோ நெல் மூட்டைகள்; இவை வெல்ல மூட்டைகள்; இவை வயல்களில் விளைந்தவை. இவை மாம்பழம்; இவை பாக்கு மூட்டை; இவை சோலைகளில் விளைந்தவை; இவை புளி மூட்டை, இவை முந்திரிப் பருப்பு மூட்டை எல்லாம் மரங்களில் விளைந்தவை. இதோ துவரம்பருப்பு; இது தான் கடலை; இவை புன்செய் நிலத்தில் விளைந்தவை. இது மொச்சை; இது உளுந்து; இவை கொள் மூட்டை; எல்லாம் கொடிகளில் உண்டானவை. இதோ நல்ல கீரை; அவரை; கொத்துமல்லி; இவை குழிகளிலும் பாத்திகளிலும் விளைந்தவை. என்ன அற்புதக் காட்சி! இதைக் கம்பர் காட்டுகிறார்.

"கதிர்படு வயலில் உள்ள
கடிகமழ் பொழிலின் உள்ள;
முதிர்பல மரத்தின் உள்ள,
முதிரைகள் புரவில் உள்ள,
பதிபடு கொடியின் உள்ள,
படிவளர் குழியின் உள்ள,
மதுவன மலரிற் கொள்ளும்
வண்டென மன்னர் கொள்
வார்"

[கடி - நறுமணம், முதிரைகள் - பருப்பு வகைகள், புரவு - புன்செய், படி - தரை, மதுவை வனமலரில் கொள்ளும், மன்னர் - உழவர்.]

இப்படியே மற்ற நூல்களிலும் வெவ்வேறு வகையில் புலவர்கள் வருணித்திருக்கிறார்கள். நாட்டுக்குச் சிறப்பு உணவு வளம் என்பதையும், எல்லா முனையிலும் ஏர் முனையே இன்றியமையாதது என்பதையும் இவை விளக்குகின்றன.

## நெல் பல பொலிக

இதை அறிந்தே சங்ககாலத்து நூலாகிய ஐங்குறு நூறு, மன்னனை வாழ்த்தும் போது அவனை வாழ்த்துவதோடு நில்லாமல், உணவுப் பொருளும் சிறக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறது.

"வாழி ஆதன்!
வாழி அவினி!
நெல்பல பொலிக!
பொன் பெரிது சிறக்க!"

என்று பாடுகிறார் புலவர். உணவும் பொன்னும் சிறக்க வேண்டும் என்று பாடுகிறார். ஆம்; இப்போதும் நமக்கு உள்நாட்டு மக்களின் உணவுக்கு நெல் வேண்டும்.

வெளி நாட்டுப் பண்டம் பெறப் பொன் வேண்டும்; எனவே இந்தத் தைப் பொங்கல் நாளில் அந்தப் பழம் புலவரோடு சேர்ந்து கொண்டு நாமும்,

"நெல் பல பொலிக!
பொன் பெரிது சிறக்க"

என்று பாடலாம் அல்லவா?

—**தினமணி.**

# குறைந்த செலவில் சீரான உணவு தயாரிப்பு

## போஷாக்கு ஆராய்ச்சிகூட டைரக்டர் டாக்டர் கோபாலன் கூறும் யோசனைகள்

### உணவுப் பழக்கத்தை மாற்றவேண்டியது அவசியம் என்கிருர்

ஆரோக்கியத்தை வளர்க்கக் கூடிய முக்கியமான உணவுச் சத்துகளைத் தரக்கூடிய சீரான உணவுகளை இப்போதுள்ள ரேஷன் ஏற்பாட்டிற்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு தயாரிக்கலாம் என்று, போஷாக்கு ஆராய்ச்சிக் கூடத்தின் டைரக்டரான டாக்டர் கோபாலன் 'தினமணி' நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

| உணவுப் பொருள்கள் | அளவு (கிராம்) |
|---|---|
| அரிசி | 175 |
| கோதுமை | 175 |
| பருப்புகள் | 85 |
| கோஸ், கீரை போன்றவை | 116 |
| மற்ற காய்கறிகள் | 85 |
| கிழங்குகள் | 116 |
| வாழைப்பழம் | 85 |
| பால் | 170 |
| சர்க்கரை அல்லது வெல்லம் | 57 |
| தாவர எண்ணெய் | 28 |
| இறைச்சி மீன் அல்லது முட்டை | 28 |

இப்போது உள்ள விலைவாசிகளின்படி இந்த உணவைத் தயாரிப்பதற்கு ரூ. 1-20 செலவாகும். அந்த அடிப்படையில் ஒரு குடும்பத்திற்குச் சுமார் ரூ. 100 மாதத்திற்குச் செலவாகும்.

இப்போதுள்ள ஏற்பாட்டின்படி சில பிராந்தியங்களில் மக்கள் தமக்குச் சரிவரப் பழக்கமில்லாத தானியங்களையும் தமது ரேஷனில் பெறுகிறார்கள்.

நாளொன்றுக்கு இரண்டரை அவுன்ஸ் முதல் மூன்று அவுன்ஸ் வரை பருப்பு வகைகளை உபயோகிக்க வேண்டும். ஏனெனில் உணவுக்குப் புரத சத்தியைத் தருவதற்கு இவை மிகவும் உபயோகமாக இருக்கின்றன.

டாக்டர் கோபாலன் மேலும் கூறினார் :—தென் இந்திய மக்களின் உணவில் கோதுமையைச் சேர்ப்பதால் சில சிரமங்கள் ஏற்படலாம். ஆனால் தென் இந்திய மக்களுக்குப் பிடித்தமான பல உணவு இனங்களை கோதுமையைக் கொண்டு தயாரிக்க முடியும்.

உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பிரதமர் விடுத்த வேண்டுகோளை

டாக்டர் கோபாலன் ஆதரித்தார். விஞ்ஞான ரீதியிலும், இப்போதுள்ள நிலைமையைக் கருதியும், பிரதமர் விடுத்த வேண்டுகோள் நியாயமானதே என்று அவர் கூறினர்.

" இப்போதுள்ள நமது விவசாய, பொருளாதார நிலைமையில் நமது நாட்டில் போஷாக்கின்மை ஏற்பட்டிருப்பதற்குப் போதிய உணவு சப்ளை இன்மையும் நமது மக்களில் கணிசமான பகுதியினர் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்வதற்குப் பணவசதியில்லாமல் இருப்பதுமே காரணம். அறியாமை, வெறுப்பு, மூட பழக்கங்கள், காலத்திற்கு ஒவ்வாத துருப்பிடித்தப் பழைய வழக்கங்களை விடாமல் வைத்துக் கொண்டிருத்தல் ஆகியவை மூலமாக ஏற்பட்டுள்ள தவருண உணவுப் பழக்கங்களும் இப்போதுள்ள நிலைமையில் நமது மக்களின் போஷாக்கின்மைக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. ஆகவே உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்வதன் மூலம் போஷாக்கை அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

தற்போது நம்முடைய பழக்க வழக்கங்களில் என்ன தவறுகள் இருக்கின்றன? பெரும்பாலும் அரிசி, கோதுமை போன்ற தானியங்களே நமது உணவாக அமைந்திருக்கின்றன. கறிகாய்கள் முதலியவை அநேகமாக நமது உணவில் இடம் பெறுவதில்லை. அத்தகைய உணவு சீரான உணவல்ல. ஏனெனில் அத்தகைய உணவுகளால் உடல் நலத்தைப் பாதுகாக்கக் கூடிய முக்கியமான உணவுச் சத்துக்களைத் தர இயலாது.

பல்வேறு உணவுத் தானியங்களின் போஷாக்கு ஒரேவிதமாக இல்லை. அவை பலவிதமாக இருக்கின்றன. ஆகவே கலப்பு தானிய உணவு ஒரே தானியத்தைக் கொண்டு தயாரிக்கும் உணவைப் பார்க்கிலும் சிறந்தது. அதைப்போலவே பல கறிகாய்களைச் சேர்த்து உபயோகிப்பது நல்லது. ஆகவே நமது மக்களின் உணவுப் பழக்கத்தை மாற்றுவதற்கு நாம் ஊக்கம் அளிக்க வேண்டும். நமது மக்களின் உணவில் ஒன்றுக்கு மேற்பட்ட தானியங்கள் சேர்ந்திருக்கவேண்டும்.

பருப்பு வகைகளையும் கறிகாய்களையும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை நம் மக்களுக்கு மனதில் பதியும்படி போதிக்க முடியும். பருப்புகள் மூலம் புரதம் கிடைக்கும். உணவுத் தானியங்கள், பருப்பு வகைகள் முதலியவை சேர்ந்த கலப்பு உணவு மூலம் கலப்பு புரதங்கள் கிடைக்கின்றன. இந்தக் கலப்பு புரதங்கள் அநேகமாக மிருகங்களின் புரதத்தைப் போலவே ஊட்டம் உள்ளவை. இந்திய மக்களின் சாப்பாடுகளில் அநேகமாக மிருகங்களின் புரதம் அடங்கியிருக்கவில்லை. ஆகவே சில பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

## கறிகாய்கள் முக்கியம்

நமது சராசரி சாப்பாட்டில் இப்போது இருப்பதைப் பார்க்கிலும் அதிகமான கறிகாய்கள் சேரவேண்டியது அவசியம். கீரை, முட்டைகோஸ், காலிபிளவர் போன்ற கறிகாய்களையும் கிழங்கு வகைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். பருப்புகளையும், கறிகாய்களையும் உணவில் கணிசமாகச் சேர்த்துக்கொண்டால் கோதுமை, அரிசி போன்ற தானியங்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

"ஹிந்துக்களின் விழாக்கள், பண்டிகைகளில் முற்காலங்களில் உபயோகிக்கப்பட்டு வந்த உணவை நுணுக்கமாகக் கவனித்துப் பார்த்தால், நமது முன்னோர்கள் பல்வேறு உணவுகளின் ஊட்டசக்திகளை அறிந்திருந்தனர் என்பது தெரியவரும். ஆகவே இந்த மாமூலான உணவுகளை உட்கொள்வதற்கு ஊக்கம் அளிப்பதும், மக்களின் உணவுப் பழக்கங்களை மாற்றுவதற்கு ஒரு வழியாகும்.

"கோதுமையை தென் இந்திய மக்களுக்குப் பிரியமான முறைப்படி தயாரிக்கலாம். உதாரணமாக கோதுமை உப்புமா தயாரிக்கலாம். வட நாட்டிற்குச் சென்று வசிக்கும் பல தென் இந்தியர்கள் சப்பாத்தி சாப்பிடுகின்றனர். ஆகவே மக்களுக்கு சீரான உணவின் அவசியம் பற்றிப் போதிக்க வேண்டியது அவசியம்.

## மலிவான உணவு

ஏழை மக்களின் ஆரோக்கியத்திற்கு உணவு சத்து உள்ள சீரான உணவைச் சிபாரிசு செய்யும் போஷாக்கு நிபுணர்கள் முக்கியமாக ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது ஏழைகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய மலிவான சீருணவை அவர்கள் சிபாரிசு செய்யவேண்டும். உணவுப் பொருள்கள் ஏழைகளுக்கு அவரவர்களுடைய இடங்களில் மலிவாகக் கிடைக்கக் கூடியவையாக இருக்க வேண்டும்.

## அன்று பிரதமர் நேரு கூறியது

காலஞ்சென்ற பிரதமர் நேரு தேசிய போஷாக்குச் சோதனைக் கூடங்களுக்கு ஒரு சமயம் வந்த போது ஒரு முக்கியமான விஷயத்தை எழுப்பினார். தற்போதுள்ள பொருளாதார நிலைமையில் விஞ்ஞான ஆராய்ச்சியின்படி ஏழை மக்களுக்கு கட்டுபடியாகக்கூடிய சீரான உணவை எவ்வாறு சிபாரிசு செய்ய முடியும் என்று அவர் கேட்டார்.

அவருடைய யோசனையின் மீது முறையே தென் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் உபயோகமாயிருக்கும் பொருட்டு குறைந்த செலவில் ஏராள உணவைத்

தயாரிப்பது பற்றி இரு சிறு புத்தகங்களை போஷாக்குச் சோதனைக்கூடம் தயாரித்தது

பெரும்பாலும் கோஸ், கீரை போன்ற கறிகாய்கள், தானியங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி எவ்வாறு மலிவான உணவுகளைத் தயாரிக்கலாம் என்பது பற்றி அந்த நூல்களில் விளக்கப்பட்டிருக்கிறது. அந்த உணவுகளைச் சாதாரண ஏழை மக்கள் தயாரித்து உபயோகிக்க முடியும். அந்த நூல்களைப் படித்து பிரதமர் நேரு மிகவும் திருப்தியடைந்தார். அவர் அந்த நூல்களை முதன் மந்திரிகளின் பார்வைக்கு அனுப்பிவைத்து அவற்றில் அடங்கியுள்ள யோசனைகளை மக்களிடையே பழக்கத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டார்.

நாம் உபயோகிக்கும் உணவின் போஷாக்கை அபிவிருத்தி செய்வதைச் சுலபமான வழிகள் இருக்கின்றன. உதாரணமாக கடலைப்பருப்பை எடுத்துக்கொள்ளுவோம். கடலைப் பருப்பு சாதாரணமாக புரதம் முதலிய உணவுச் சத்துகளைத் தருகிறது. முளை விடும் பருப்பு வகைகளைச் சேர்த்துக்கொண்டால் அவை கடலைப் பருப்பின் "பி", 'சி' 'வைட்டமின்' சத்தை அதிகப் படுத்தும். கோஸ், கீரை போன்ற 'இலை கறிகாய்களை' அதிகமாக வேகவைப்பதைத் தவிர்த்தால், 'வைட்டமின்' சக்தி கெடாமல் இருக்கும். அரிசியை அதிகமாகத் தீட்டாமல் இருந்தால், அதிக அளவில் 'வைட்டமின்' சக்தியும், புரதமும் கிடைக்கும். காலி பிளவர், நூல்கோல் முதலியவற்றின் மீதுள்ள இலைகளைத் தள்ளிவிடக் கூடாது. அவற்றைப் பயன் படுத்துவதால், உபரிச் செலவு இன்றி உணவுச் சத்தும், தாதுப் பொருளும் கிடைக்கும்.

—"தினமணி"

---

14ஆம் பக்கத் தொடர்ச்சி

வில் ஒரு கிராமத்துக்கு டாஷ்கண்ட் நகர் என்று பெயர் சூட்டப்படும். ரஷியாவிலுள்ள டாஷ்கண்ட் நகரில்தான் சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய ராஸ்திரி அயூப் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

அந்தக்கிராமத்தில்நாலுஏக்கர்கள் கொண்ட ஒரு விவசாயப் பண்ணை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு "லால் பகதூர் சாஸ்திரி பண்ணை" என்று பெயர் வைக்கப் பட்டுள்ளது. அரும்பாவூர் திரு. முத்துவெங்கடாசலம் ரெட்டியார் இந்தப் பண்ணைக்காக 100 ஏக்கர் நிலம் நன்கொடையாக அளித்திருக்கிறார்.

# பள்ளிக் கட்டண வசூல் கூடாது என்பதே சர்க்கார் கொள்கை

## இதில் வேற்றுமை பாராட்ட முடியாது : அசெம்பிளியில் முதல் மந்திரி அறிவுறுத்தல்

சென்னை, பிப், 5—சென்னைக் கல்வி விதிகளின்படி அங்கீகாரம் செய்யப்பட்ட எந்த செகண்டரி பள்ளியிலும் மாணவர்களுக்குக் கட்டணம் விதிக்கக் கூடாது என்பதுதான் சர்க்காரின் கொள்கையென்றும், ஆகவே பணக்காரர்களின் வருமான வரி செலுத்துகிறவர்களின் குழந்தைகளுக்குக் கட்டணம் விதிக்க வேண்டும் என்னும் யோசனையை ஏற்றுக்கொள்ள இயலாது என்று இன்று அசெம்பிளியில் முதல் மந்திரி கேள்வி நேரத்தில் கூறினார். பள்ளிப் படிப்பு விஷயத்தில் இத்தகைய வேற்றுமைகளை உண்டு பண்ணத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

கட்டிட நிதிகளுக்கும், மற்றும் சில நிதிகளுக்கும் சில பள்ளிகளில் பணம் வசூலிக்கப் படுவதாக திரு. பாலகிருஷ்ணன் கூறினார்.

கட்டிட நிதிக்குப் பணம் வசூல் செய்வதற்குத் தடையில்லை என்றும், ஆனால் கட்டாயப் படுத்தி வசூல் செய்யக்கூடாது என்றும் முதல் மந்திரி கூறினார்.

பெண்கள் பள்ளிகளில் ஆண் ஆசிரியர்களை நியமனம் செய்யக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா என்று திரு. கருணாநிதி கேட்டார். அப்படியொன்றும் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று முதல் மந்திரி கூறினார். ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியைகளை நியமிப்பது நல்லது என்று தான் அபிப்பிராயப் படுவதாக முதல் மந்திரி கூறினார்.

திரு. கல்யாணசுந்தரம் (கம்யூ) கேட்ட கேள்விகளுக்குப் பின் வருமாறு பதில் கூறப்பட்டது : சென்னை இராஜ்யத்தில் 1168 ஜில்லா போர்டு உயர்நிலை ஆண் பள்ளிகளும், 79 ஜில்லா போர்டு உயர்நிலை பெண் பள்ளிகளும் இருக்கின்றன. நிர்வாகத்திற்காக அவை தனி பிரிவாக வைத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

பழைய ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகம் பற்றி விசேஷ ஜில்லாக் கல்வி அதிகாரிகளுக்கு யோசனை கூறும் பொருட்டு ஒவ்வொரு அபிவிருத்தி ஜில்லாவுக்கும் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டிருப்பதாக முதல் மந்திரி கூறினார்.

### திருச்சியில் ஒரு "டாஷ்கண்ட்" நகர்

திருச்சி, பிப். 4—திருச்சி ஜில்லா, பெரம்பலூர் தாலுக்கா

13ஆம் பக்கம் பார்க்க

# ரஷிய விண்வெளிக் கப்பல் சந்திரனில் மிருதுவாக இறங்கியது

## வரலாற்றுப் பெருமை வாய்ந்த சாதனை

மாஸ்கோ, பிப். 3.—சோவியத் விண் வெளிக் கப்பல் 'லூனா9' இன்றிரவில் சந்திர மண்டலத்தில் மிருதுவாக இறங்கியதாகவும், இது வரலாற்றுப் பெருமைவாய்ந்த முதல் சம்பவம் என்றும் மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

'லூனா' இன்று மாலை 6–15 மணி 30 வினாடிக்கு (இந்திய நேரம் இரவு 12-15 மணி, 30 வினாடி) சந்திர மண்டலத்தில் அமைதியாக வந்திறங்கியது.

சந்திரமண்டலத்தில் இறங்கிய பிறகும் 'லூனா 9' பூமிக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்ததாக டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

'லூனா'வில் நுண்ணிய கருவிகள் அடங்கியிருக்கின்றன.

சென்ற டிசம்பரில் 'லூனா 8' என்னும் சோவியத் விண் வெளிக் கப்பல் சந்திர மண்டலத்தில் மிருதுவாக இறங்குவதில் அநேகமாக வெற்றி பெற்றது. ஆனால் அதன் நுண்ணிய கருவிகள் இறுதிக் கட்டத்தில் இயங்கவில்லை.

சென்ற வருடம் மேமாதத்தில் 'லூனா 5' விண் வெளிக் கப்பலையும் அக்டோபரில் 'லூனா 7' விண் வெளிக் கப்பலையும் சந்திர மண்டலத்திற்கு சோவியத் ரஷியா செலுத்தியது. ஆனால் அவை சந்திரனில் மிருதுவாக இறங்க முடியவில்லை. அவை சந்திரனில் மோதின. சென்ற வருடம் ஜூன் மாதத்தில் செலுத்தப்பட்ட 'லூனா 6' விண் வெளிக் கப்பல் சந்திரனை அடைவதற்கு முன்பே விலகிச் சென்று விட்டது.

### புதிய ஆராய்ச்சி

'லூனா 9' விண் வெளிக் கப்பல் சந்திர மண்டலத்தில் மிருதுவாக இறங்கியதால் சந்திர மண்டலத்தின் மேல் பரப்பு, பாறைகள் மயமாக இருக்கின்றனவா அல்லது புழுதிப்படலமாக இருக்கிறதா என்று விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள முடியும். மனிதரைச் சந்திர மண்டலத்திற்கு அனுப்புவதற்கு முன்பு மனிதருடன் கூடிய விண்வெளிக் கப்பல்களைத் தாங்கக் கூடிய சக்தி சந்

திர மண்டலத்தின் மேல் பரப்புக்கு உண்டா என்பதை விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

சந்திரமண்டலத்தில் 'ரெய்னர் 'மரியா' என்னும் பள்ளத்தாக்குகளுக்கு மேற்கே 'புயல் கடல்' பிரதேசத்தில் 'லூனு 9 இறங்கியதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

'லூனு 9' விண் வெளிக் கப்பலில் ரேடியோ கருவியும் மற்ற நுண் கருவிகளும் நன்கு இயங்கி வருகின்றன.

**''சந்திரனில் இறங்குவோம்''**

''சந்திரன் மண்ணில் ஏற்கெனவே அடிவைத்தாகிவிட்டது. ''சந்திரனே காத்திரு, உன்னை நாங்கள் நேரில் காண்போம்'' என்று, ரஷிய விண் வெளி வீரர் நிகோலயல் இன்று நம்பிக்கையுடன் கூறினார்.

இந்தச் சோதனை, சந்திரனில் முதல் தடவையாக மனிதன் கால் வைக்கும் நாளை நாம் நெருங்கச் செய்கிறது என்று பிரபல ரஷிய வானியல் விஞ்ஞானி டாக்டர் அலா மாசிவிச் கூறினார்.

''நமது தாய் நாட்டுக்குப் பெருமை'' என்ற தலைப்புடன் எல்லா மாஸ்கோ பத்திரிகைகளும் இன்று இச்செய்தியை பிரதானமாக வெளியிட்டன.

சந்திரனிலிருந்து "லூனு" அனுப்பிக் கொண்டு இருக்கும் டெலிவிஷன் படங்களை ரஷிய விஞ்ஞானிகள் இன்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

சந்திரனில் மனிதனை இறக்கும் சக்தி ரஷியாவுக்கு ஏற்கெனவே இருப்பதாக இச்சாதனையிலிருந்து நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆனால் சந்திரனின் நிலப்பரப்பில் அவனுக்கு ஏற்படக்கூடிய அபாயம்பற்றி இன்னமும் தெரியவில்லை. லூனுவில் உள்ள கருவிகள் விண்வெளி வீரர் எவ்வாறு பிழைக்க முடியும் என்பதை விஞ்ஞானிகள் முடிவு செய்ய உதவும்.

1970க்குள் இப் பிரச்னையை ரஷியா தீர்க்கும் என மாஸ்கோவில் நம்பப்படுகிறது. சந்திரனுக்கு முதலில் யார் செல்வது என்பது குறித்து அடுத்த சில ஆண்டுகளில் ரஷியா—யு. எஸ். இடையே கடும்போட்டி இருக்கும்.

# பொங்கலும் கும்மியும்

திரு. பெ. தூரன், பிரதம ஆசிரியர் : "கலைக்களஞ்சியம்", சென்னை.

"கும்மியடிக்கலாம் வாருங்கள்" என்று கூப்பிடும் போதே உள்ளத்திலே எத்தனை மகிழ்ச்சி பொங்குகிறது! பெண்களுக்குத்தான் எத்தனை உற்சாகம்! சிறுமிகளின் குதூகலத்தைச் சொற்களினுலே சொல்லக்கூட முடியாது.

பொங்கல் விழாவிற்கும், கும்மிக்கும் எப்படியோ ஓர் அலாதியான தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் திருவிழாவின் போது முக்கியமாகக் கிராமங்களிலே கும்மியடிக்காத இளம் பெண்களே இருக்கமாட்டார்கள். இளம் பெண்கள் கும்மியடிக்கும் போது, மக்களெல்லாம் அதைக் கண்டுகளிக்கத் திரண்டு வந்து விடுவார்கள். அப்படித் திரண்டு வந்த மக்களின் முகங்களிலே தாண்டவமாடுகின்ற சிரிப்பைத் தான் என்னவென்று சொல்லுவது! கும்மி என்றுல் வெவ்வேறு சந்தங்களில் கைதட்டி ஆடிவருவதுமட்டுமல்ல, அந்தச் சந்தங்களுக்குத் தக்கவாறு பாட்டுப் பாடுவதும் ஒரு முக்கியமான அம்சம். கும்மிக்குத்தான் எத்தனை வகையான சந்தங்களிலே எத்தனை வகையான பாட்டுக்கள் உருவாகியிருக்கின்றன! தாளலய நயங்களோடும், ஜதிகளோடும் கால் தட்டி, வளைந்தும் நெளிந்தும் ஆடுகின்ற கும்மியாட்டத்திற்குத் தகுந்தவாறு ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன.

இந்தக் கும்மிப்பாட்டின் பெருமையை அறிந்துதான் பாரதியார் பெண்கள் விடுதலையைப் பற்றிப் பாடவரும்பொழுது,

**'கும்மியடி தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைதட்டிக் கும்
மியடி .**

என்று கும்மிப் பாட்டே பாடி விடுகிருர். பாரதியார் மட்டும் தாஞ அப்படிப் பாடியிருக்கிருர்? தெய்வ மணங் கமழும் அருட்பாக்களைப் பாடிய இராமலிங்க வள்ளலாரையும் இந்தக் கும்மிப் பாட்டு உள்ளங்கவர்ந்திருக்கின்றது.

கிராமங்களிலே கும்மியடிக்கும்போது, பாடப்படுகின்ற ஒரு சில பாடல்களை இப்போது நாம் பார்ப்போம்.

விநாயகப்பெருமான் இல்லாத ஊர் உண்டா? அவர் 'ஓம்கார' சொரூபமான பரம்பொருளின் வடிவம். பரம்பொருள் இல்லாத இடமே இல்லை என்று பெரியோர்கள் பலரும் நமக்கு எடுத்துக் கூறி இருக்கிருர்கள். ஆனல் எங்கும் இருக்கின்ற அந்தப் பரம்பொருளை நம்மால் அவ்வளவு எளிதிலே காணமுடிகின்றதா?

அதுதான் இல்லே. இந்தக் கருத்தையே ஓர் எளிமையான நாட்டுப்புறக் கும்மிப் பாடல் மிக அழகாக எடுத்துச் சொல்லுகின்றது? பிள்ளேயார் இங்கே இருக்கிருர், அங்கே இருக்கிருர் என்று சொல்லக் கேட்டுத் தேடிக் கொண்டே போனுல் அவர் எங்கேயும் கண்ணுக்குப் புலனுவ தில்லே. செட்டித் தெருவிலே, வாணிகத் தெருவிலே, சுத்தரித் தோட்டத்திலே—இவ்வாறு பல இடங்களில் தேடியும் அவரைக் காண முடியவில்லேயாம்.

பிள்ளேயார், பிள்ளேயார்-அவர்
எங்கெங்கே பிள்ளேயார்
செட்டியார் தெருவிலே
செண்டாடுருர் பிள்ளேயார்
அங்கேயும் போய்ப்பார்த்தேன்
அவர் எங்கேயோ பிள்ளேயார்
வாணியர் தெருவிலே—அவர்
வாதாடுருர் பிள்ளேயார்
அங்கேயும் போய்ப் பார்த்தேன்
அவர் எங்கேயோ பிள்ளேயார்
கத்தரித் தோட்டத்தில்
களே கொத்துருர் பிள்ளேயார்
அங்கேயும் போய்ப் பார்த்தேன்
அவர் எங்கேயோ பிள்ளேயார்
பிள்ளேயார், பிள்ளேயார்—அவர்
எங்கெங்கோ பிள்ளேயார்

வாசலிலே காய்த்துத் தொங்குகின்ற பாகற்காயையும் வாழைக்காயையும் பற்றி ஏதோ பேசப்படுவதுபோல ஒரு பாட்டுத் தொடங்குகின்றது. ஆனுல் அதன் குறிப்பெல்லாம் வேருெரு முக்கியமான விஷயத்தைப் பற்றியது. நகைச்சுவையான விஷயம், வேடிக்கை செய்வதான விஷயம். கும்மி தட்டி இப்பாட்டு முடியும்போது, கலீரென்று எல்லோரும் சிரித்துவிடுவார்கள். அப்படி அதிலே பொருளடங்கியிருக்கிறது. பாட்டு முதலில் துவங்கும்போது, கசப்பான பாகற்காயைப் பற்றித்தான் துவங்குகிறது. ஆனுல் பாட்டிலே கசப்பு இல்லே. அது முடியும்போது, அத்தனேயும் இனிப்பு! பாட்டைப் பார்க்கலாம்.

வாசலிலே பாகற்காய்
தொங்குதடி வாழைக்காய்
மாமன் வரான் பார்த்துக்கோ
பணங் கொடுப்பான் வாங்கிக்கோ
சுருக்குப் பையிலே போட்டுக்கோ
சுண்ணும்பு வெற்றிலே கூட்டிக்கோ
தட்டானே இங்கே இட்டுக்கோ
தாலி வாங்கிக் கட்டிக்கோ.

வேருெரு பாட்டு இந்தப் பாகற்காயைப் பற்றியே பேசுகிறது. ஆனுல் அதிலே குறித்துள்ள விஷயம் வேறு. மாமனே அல்லது மைத்துனனே எல்லோரும் கேலி செய்வார்கள். எப்படியாவது அவர்களிடம் சூழ்ச்சி செய்து, தந்திரமாக நகையாடத் தொடங்குவார்கள். இப்படி விளேயாடுவதில் இளஞ்சிறுமிகள் தான் அதிகமான ஆர்வங்கொண்டிருப்பார்கள். எல்லாம் விளேயாட்டாகத்தான். ஆனுல் இப்படிப்பட்ட விளேயாட்டை அண்ணன் தம்பிகளிடத்திலே செய்ய மாட்டார்கள். விளேயாட்டாகவும் அவர்களேக் காட்டிக் கொடுத்து விடமாட்டார்கள்.

அந்த உள்ளப்பாங்கு, இந்தப் பாகற்காய்ப் பாட்டிலும் வெளிப் படுகிறது. அண்ணன் நட்ட பாகற்கொடியிலே காய்த்துத் தொங்கிய காய் அதிகமான கசப்பாக இருந்துவிடக்கூடா தாம். அப்படி இருந்தால் வீட் டிற்கு வந்திருக்கும் மைத்துனன் மார்கள் அண்ணனைக் கேலி செய் வார்களல்லவா! அப்படிச் செய்யா மலிருக்க வேண்டுமென்று, பாகற் காய்க் குழம்பில் சர்க்கரையைக் கொட்டும்படி சொல்லுகிறாள் ஒரு பெண்.

ஒரு கொடியைத் தூக்கத் தூக்க
ஓரா யிரம் பாகற் காய்
அறுக்கலாமோ பொரிக்கலாமோ
அத்தான் தின்கிற பாகற்காய்
ஆரு நட்ட பாகற் காய்
அண்ணன் நட்ட பாகற்காய்
கசக்குமோ புளிக்குமோ
கலந்து கொட்டடி சர்க்கரையை.

கும்மியடிக்கும்போது, பாட்டு இத்துடன் நின்றுவிடாது. "இரு கொடியைத் தூக்கத்தூக்க இரண் டாயிரம் பாகற்காய்", "மூன்று கொடியைத் தூக்கத்தூக்க மூவா யிரம் பாகற்காய்" என்று இப்ப டியே தொடர்ந்துபோகும். மற்ற வரிகளெல்லாம் முன்போலவே மாறுதலின்றி இருக்கும். பாட்டு நீண்டு கும்மியின் வேகமும் அதிகமாகும்போது அத்தனையும் சர்க்கரையாக இருக்குமென்று கூறத்தேவையில்லை.

ஏதாவது ஒன்றை வேண்டு மென்று தேடப்போனால், அது அத்தனை சுலபமாகக் கிடைத்து விடுகிறதா? தேடப்போகும் போதுதான், அது கிடைப்ப தில்லை. இந்த உண்மையை எடுத்துக் காண்பிப்பதைப்போல, ஒரு கும்மிப் பாடல் அமைந் திருக்கிறது.

பச்சைப் பச்சைத் தவக்களை
பதுங்கிப் பாயும் தவக்களை
எத்தனை நெல்லுக்கு வாழ்க்கைப் பட்டாய்
கோடி நெல்லுக்கு வாழ்க்கைப் பட்டேன்
கோடி நெல்லைக் குத்தி வாரச்
சித்திரப் பெண்ணையும் காணோ மாம்
சித்திரைப் பெண்ணுக்கு முத் திரை கொடுக்கக்
கணக்குப் பிள்ளையைக் காணோ மாம்
கணக்குப் பிள்ளையை கட்டி யெழுப்பிடக்
கைக் குழந்தையைக் காணோமாம்
கைக் குழந்தைக்குப் பால் கொடுத்திட
டெல்லி எருமையைக் காணோ மாம்
டெல்லி எருமையை மேய்த்து வந்திட
இடைப் பையனையும் காணோமாம்
இடைப் பையனுக்குக் கஞ்சி வார்க்க
இடைச் சிறுக்கியைக் காணோ மாம்; இடைச் சிறுக்கிக்குப் பேனு

பார்க்க குரங்குக் குட்டியைக் காணோமாம்.

தக்கிணி என்ற சொல்லை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு சிறிய அளவு என்று அதற்குப் பொருள். துக்கிணி என்கின்ற சொல்லும் அற்பம் என்ற பொருளிலே வழங்குகிறது. இப்படி ஒரு பொருட்டாக மதிக்கப் படாத இளஞ்சிறுமியர்கள் என்றாலும் உங்கள் வாசலிலே கும்மியடிப்பதற்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்று சொல்லுவது போல ஒரு பாட்டு தொடங்குகிறது. அதன் சந்தமும் வேகமும் நம்மை மகிழ்ச்சியிலே ஆழ்த்துவதோடு அந்தச் சிறுமிகளிடத்திலே பரிவு கொள்ளச் செய்கின்றன.

தக்கிணித் தக்கிணி நாங்கதான்-
ஒரு
தருமத் தக்கிணி நாங்கதான்
பச்சைப் பாவாடைக்கு மெருகு
குத்தும்
பார்ப்புப் பசங்களும் நாங்கதான்
அடுக்குச் சட்டியில் முருக்குச்
சுட்டு
அறியாத பசங்க நாங்கதான்
தேருக்கு முன்னால் கும்மியடிக்
கும்
தேவர் பசங்க நாங்கதான்
நாலா பக்கமும் மண்ணெடுத்து
நாணயமாக ஓர் ஏரிகட்டி
ஏரிக்குள்ளே படகு போகுது
ஏலேலோ கொட்டுங்க தோழிப்
பெண்காள்!
தக்கிணித் தக்கிணி நாங்கதான்-
ஒரு
தருமத் தக்கிணி நாங்கதான்.

இவ்வாறு பல பாடல்களைப் பாடிக் கும்மியடிக்கும் சிறுமிகள் கடைசியாக வாழ்த்துப் பாடல் பாடாமலும் செல்வதில்லை. பொங்கல் கோலாகலத்திலே, உண்டு மகிழ்ந்த களிப்பிலே, ஆடும் ஆட்டத்தின் ஒய்யாரத்திலே, இந்த வாழ்த்துப் பாட்டு வருகிறது. இவ்வாழ்த்துப் பாடலும், கும்மியடித்தே தொடங்கி முடிகிறது.

வாழ்த்துகிறோம் வாழ்த்து
கிறோம்
முக்காலும் வாழ்த்துகிறோம்
அண்ணனும் தம்பியும்
அழகு சமைத்து வாழணும்
மாமனும் மச்சானும்
மலைபோல வாழணும்
சுரையாய்ப் படர்ந்த வீடு
துரைவீடு ஆகணும்
பீர்க்குப் படர்ந்தவீடு
பெரிய வீடு ஆகணும்.

பொங்கல் திருநாளிலே இந்தச் சிறுமியர்களுடன் சேர்ந்து கொண்டு, நாமும் இவ்வாறு எல்லோரையும் வாழ்த்தவேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

பொங்கல் என்றால், இது இன்பத்தின் பொங்கல். பொங்கலோ பொங்கல்!

"கிராம நலம்"

# ஆசிரியர்களின் அறப்பணி

*நாளைய மன்னர்களை உருவாக்கும் நற்பணியினை ஆற்றி வருபவர்கள் ஆசிரியப் பெருமக்கள். அறிவு விளக்கைத் தூண்டி, எதிர்காலச் சமுதாயம் எழிலுற்றுத் திகழ, நல்வாழ்வுப்பாதை அமைத்துக்கொடுப்பவர்கள் அவர்கள். இந்த நெருக்கடி நேரத்தில், கல்வி பயிலுவிப்பது மட்டு மல்ல, களத்திலே இறங்கிப் போராடும் நம் வீரர்களின் குடும்ப நலனிலும் அக்கறை செலுத்தி, அவர்கள் அருமை யான பணியினையும் புரிந்து வருகிறார்கள்.*

செப்டம்பர் ஐந்தாம் தேதி பாரத ஜனாதிபதியின் பிறந்த தினம். அந்த தினம் ஆசிரியர் தினமாகவும் அன்றிலிருந்து ஒரு வாரம் ஆசிரியர் வாரமாகவும் நாடெங்கும் கொண்டாடப் படு கிறது. காரணம், நமது ஜனாதி பதி ஓர் ஆசிரியர். நானிலம் போற் றும் நல்லாசிரியர். அவருடைய பிறந்த தினத்தை, ஆசிரியர் தின மாகக் கொண்டாடுவது மிகவும் பொருத்த முடையதாகும்!

கோயம்புத்தூரைச் சேர்ந்த ஆசிரியர்கள் கடந்த செப்டம்பர் ஒன்பதாம் தேதி கோவை நகர மன்றத்தில் கூடினர், ஆசிரியர் வாரத்தைக் கொண்டாட.

பாரத ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி, ஆசிரியர் வாரம் கொண்டாடப் போந்த அந்த ஆசிரியப் பெருமக்கள், பாரத ஜவான்களின் குடும்பங்க ளுக்குப் பாதுகாப்பாக இருப்ப தற்கான ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். அதன் அடிப் படையில் அமைந்தது **ஆசிரியர் கள் பாதுகாப்பு நலப் பேரணி.** நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் மட்டுமே கூடி உருவாக்கிய அந்த அமைப்பு, திடீரென்று விஸ்வரூ பம் எடுத்தாற்போல், கோவை மண்டலத்தில் (கோயம்புத்தூர், நீலகிரி, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்கள்) இன்று லட்சக்கணக்கான ஆசிரி யர்களைத் தன்னுள் கொண்டு, மக்கள் மனத்தில் மகத்தான இடம் பெற்று விட்ட மாபெரும் இயக்கமாகத் திகழ்கிறது!

## நல்லெண்ணத்தின் அடிப்படை

ஜவான்கள் நமக்குப் பாது காப்பு; அவர்களுடைய குடும்பத் தினருக்கு ஆசிரியர்கள் பாது காப்பு என்று சொல்லும் அள வுக்கு ஆசிரியர் பேரணி அரும் பணி ஆற்றி வருகிறது.

1962-ல் சீனப் படையெடுப்பு நடைபெற்றது. அப்பொழுது இந்த இயக்கம் அரும்பியது. கோவையில் அல்ல. மதுரை மாநகரில். படையிலுள்ள வீரர் களின் குடும்பங்களுக்குத் தேவை யான உதவிகளைச் செய்வதற்காக மதுரை நகரில் ஆசிரியர் பேரணி உருவாக்கப்பட்டது. இன்றைய முதல் அமைச்சரும், அப்போ தைய கல்வி அமைச்சருமாகிய

திரு. எம். பக்தவத்சலம் அந்தப் பேரணியைத் தொடங்கி வைத்தார்.

சீனப் படையெடுப்பு முடிந்ததும், ஆசிரியர்களின் பேரணியில் வேலைப் பளு, பொறுப்பு சற்று குறைந்தது. ஆனால் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு ஆரம்பமானதும், அந்தப்பணி மறுபடியும் தொடங்கிவிட்டது. அதுவும் முந்தியதை விட, பன்மடங்கு அதிகமான உத்வேகத்தோடு—உற்சாகத்தோடு துவங்கி விட்டது.

கோவை ஆசிரியர் பேரணியையும், முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தான், கடந்த செப்டம்பர் பத்தொன்பதாம் தேதியன்று தொடங்கி வைத்தார்கள். அந்தப் பேரணி, இன்று கோவை மண்டலம் முழுவதும் பரவியுள்ளது. தற்போது 10,000 ஆசிரியர்கள் அந்த இயக்கத்தில் இடம் பெற்றுள்ளனர்.

**மனமுவந்து செய்யும் சேவை**

ஆசிரியர் பேரணியின் குறிப்பிடத்தக்க அம்சம் தன்னிச்சையான சேவையாகும். எல்லாப் பள்ளிகளிலும் (குறிப்பாக ஆரம்பப் பள்ளிகள்) ஆசிரியர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் 10 பேர் உறுப்பினர்கள். அவர்களுள் சீனியர் யரோ அவர்தான் அந்தக் குழுவுக்குத் தலைவர். இவர்களுக்கு அடையாளச் சின்னங்கள் (Badges) உண்டு. ஒரு குழுவில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் அவரவர் பகுதியில் உள்ள ஜவான்களின் குடும்பங்களுக்குச் செல்கின்றனர். அப்படிச் செல்வதற்குக் குறிப்பிட்ட கால நேரம் என்று எதுவும் நிர்ணயமில்லை. ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் போகிறார்கள். ஜவான்களின் குடும்பத்தினரைக் கண்டு பேசுகிறார்கள்.

முதலில் அந்தக் குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களைக் கணக்கெடுக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளைக் குறித்துக் கொள்கிறார்கள். அதற்கென அவர்கள் ஜவான்களின் குடும்ப சர்வே பதிவேடு என்ற ஒன்றைக் கையிலேயே வைத்திருக்கிறார்கள். அந்தப் பதிவேட்டில் தினசரி தேவைகள் என்ற ஒரு பகுதி இருக்கிறது.

அதில்:

(1) உணவு பங்கீடு கார்டு உள்ளதா?

(2) சர்க்கரை பங்கீடு கார்டு உள்ளதா?

(3) மண்ணெண்ணெய் பங்கீடு கார்டு உள்ளதா?

என்ற பிரிவுகளில், அதற்குரிய பதில்களைக் குறித்துக் கொள்கிறார்கள். இவை மட்டுமின்றி, குழந்தைகளின் கல்வி வசதி, முதியோர்களுக்குத் தொழில் வாய்ப்பு, உபதொழில், பயிற்சி பெற விரும்புகிறவர்கள் விவரம், வைத்திய வசதி, வீடு வசதி, விவசாய உதவிகள் மற்றும் குடிசைத் தொழில்கள் செய்வதற்கான உதவிகள் பற்றிய விவரங்களையும் சேகரிக்கிறார்கள். பிறகு இவற்றைத் தொகுத்துக் குறிப்

பிட்ட அரசாங்க அலுவலகத்திற்கு அனுப்புகிறார்கள்.

உதாரணமாக, ஒரு ஜவானின் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது. அவருடைய தகுதி, திறமை, படிப்பு, தொழில் நுட்பம் ஆகியவற்றைச் சேகரித்து மாவட்டக் குழுவின் முன் சமர்ப்பிக்கிறார்கள். மாவட்டக் குழுவில், மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி இடம் பெற்றிருக்கிறார். அவர், இந்த விவரங்களின் அடிப்படையில் ஜவானின் குடும்பத்திலுள்ளவருக்கு எத்தகையவேலை தேடித் தர முடியுமோ அதை உடனுக்குடன் செய்து முடிக்கிறார்.

ஜவானின் குடும்பத்தினருக்கு வீடு கட்டுவதற்கு மனை வேண்டுமென்றால், அந்தப் பிரச்னையானது, அது சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. யாருக்கேனும் தொடர்ந்த வைத்திய சிகிச்சை அளிக்க வேண்டுமெனில் மாவட்ட சுகாதார அதிகாரிக்கும், விவசாய காரியங்களுக்குத் தேவையான உதவிகள் தேவைப்பட்டால் மாவட்ட விவசாய அதிகாரிக்கும் அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட அளவில் இவ்வளவும் ஒரு புறம் நடைபெறுகிறது. இனி, பஞ்சாயத்து யூனியன் அளவில், பஞ்சாயத்து யூனியன் தலைவரின் தலைமையில் இயங்கும் குழு தனது அதிகார வரம்புக்கு உட்பட்ட அளவில் எல்லாப் பணிகளையும் விரைவாகச் செய்து முடிக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில், தொழில், கல்வி, விவசாயம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும் வளர்ச்சி அதிகாரிகள் தம்மிடம் வரக்கூடிய கோரிக்கைகளுக்கென உடனடி நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் மூலம் குறைகளுக்கு நிவாரணம் தேடிக் கொள்வதற்காக, ஜவான்களின் குடும்பத்தினருக்கு அடையாளச் சீட்டுகள் வழங்கியுள்ளனர். அந்த அடையாளச் சீட்டின் பேரில் தேவையான உதவிகள் பெறவோ அல்லது செய்யவோ மிகவும் ஏதுவாக இருக்கிறது.

இவ்வாறு அரசாங்கஅலுவலகங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை பக்க பலமாகக் கொண்டு, ஆசிரியர் பேரணி பணியாற்றுகிறது. அதே போல, ஜவான்களின் குடும்பங்களுக்கு அரசாங்க அலுவலகங்கள் செய்யும் உதவிகளில் பெரும் பகுதி ஆசிரியர்கள் திரட்டித் தரும் குறிப்புகளின் அடிப்படையில் செய்யப்படுகிறது. மொத்தத்தில் அரசாங்கத்தின் சுமையில் பாதியை இந்த ஆசிரியர் பேரணி செய்து வருகிறது.

தேசப் பாதுகாப்புக்கு உதவ சிறு சேமிப்புத் திட்டம் சிறந்த சாதனமாகும். சிறு சேமிப்பு இயக்கத்தை ஊக்குவிக்கும் பணியையும் ஆசிரியர் பேரணி மேற்கொண்டுள்ளது.

மக்கள் எந்தெந்த வகைகளிலெல்லாம் ஜவான்களின் குடும்பத்தினருக்குப் பாதுகாப்பாக இருந்து உதவ முடியும் என்பதற்கு ஆசிரியர் பேரணி, ஒரு சிறந்த எடுத்துக் காட்டு ஆகும்.

—கிராம நலம்

# இலக்கியத்தில் பறவைகள்

கே. எஸ். மகாதேவன், பி. எஸ். ஸி., எம். ஏ.

கதிரவன் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேற்குத்திசையில் ஆழ்கின்ற நேரம். இருள் சிறிது சிறிதாக காடு முழுவதும் படர்ந்து கொண்டிருக்கின்றது. பகற் காலத்தில் எழுந்து பரந்தபடியிருந்த பல்வேறு பறவைகளின் பாட்டொலிகளெல்லாம் அடங்கிவிட்டன. பகற்காலம் முடிந்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கும் இளங் குஞ்சுகள் மேலும் மேலும் வாய் திறந்து இரை வேண்டும் என்று தாய்ப் பறவைகளிடம் முரண்டு பிடித்துக் கொண்டிருந்தன! அப்பொழுது எங்கிருந்தோ 'ஊஉ கூஉ' என்ற ஓர் ஒலி எழுகிறது. கூட்டிலிருந்த குஞ்சுகளெல்லாம் அக்குரலைக் கேட்டு நடுங்கித் தாய்ப் பறவைகளின் இறக்கையணைப்பில் ஒடுங்கிக் கொள்கின்றன. இரவு நேரத்தில் எழும் அந்த அதிரும் குரலுக்கு உரிய பறவையே ஆந்தை!

## ஆந்தைகளின் வாழ்க்கைப் போராட்டம்!

அதோ ஒரு நிழல் உருவம்! கூடுகளில் இருக்கும் பறவைகளைக் கூட நடுங்க வைக்கும் அந்த இருண்ட நிழலுருவம் முற்றியதொரு இலந்தை மரப் பொந்திலிருந்து வெளிப்பட்டு இருளோடு இருளாகக் கலக்கின்றது! பட்டுப்போய்ப் பல்லாண்டுகளாகப் பட்டை கழன்று இருளிலும் வெளுத்துத் தோன்றும் அந்த மரந்தான் ஆந்தையின் இருப்பிடம். அந்த மரத்தின் பொந்தில்தான் ஆந்தையின் மனைவியும் நான்கு இளங்குஞ்சுகளும் இருக்கின்றன. ஆந்தையின் குடியிருப்பினைக் கூடு என்று சொல்ல முடியாது! ஆந்தை மரப் பொந்தினுள் மக்கிப் போன இலை தழைகளையும், எலும்புகளையும், இறகுகளையும் இட்டு மெத்தென்று ஆக்கியிருக்கும்! வெளியில் பறந்து சென்ற ஆந்தை சிறிது நேரத்திற்கெல்லாம் தன் கூரிய வளைந்த நகங்களில் ஒரு சிறு சுண்டெலியைப் பற்றியபடி பொந்திற்குத் திரும்புகிறது. கிரீச்சிட்டுக் கொண்டிருக்கும் ஆந்தைக் குழந்தைகளின் வாயினுள் சுண்டெலியின் மெல்லிய இறைச்சி சிறிது சிறிதாகச் செல்லுகிறது!

## தாய் ஆந்தையின் முறை!

இப்பொழுது தாய் ஆந்தை வெளியில் புறப்படுகிறது. எவ்வளவு நாழிதான் அது காற்றோட்டமில்லாத அந்த இலந்தை மரப் பொந்திற்குள் 'ஆந்தை விழி' விழித்துக் கொண்டிருக்க முடியும்? பொந்திலிருந்து புறப்பட்ட ஆந்தை இலந்தை மரத்தின் பட்டுப் போன கிளையிலே

சிறிது நேரம் அமர்ந்திருக்கின்றது. தனது மெல்லிய இறகுகளை தன் அலகால் கோதித் திருத்திக் கொள்கின்றது. அதன் பெரிய உருண்டையான தலை நிழல் போல் இருந்தாலும் அதன் முகத்தில் இருந்து சுழலும் வட்டமான இரு கண்களும் அந்த இருளிலும் பளபளக்கின்றன? கண்களைச் சுற்றிலும் வட்டமாக அமைந்திருக்கும் உறுதியான இறகு மயிர்கள் எவ்வளவு அருமையாகக் கண்விழியின் அளவினைப் பெருக்கிக் காட்டுகின்றன! அதன் காதுகள் சிறியனவாக இருந்தாலும் நெடுந் தொலைவில் படபடத்தபடி பறக்கும் வௌவால்களின் ஒலியையும், நீர் நிலையில் தாண்டிக் குதிக்கும் தவளைகளின் ஓசையையும் மிகவும் நுட்பமாக அறிந்து கொள்கின்றன! தன் கால் நகங்களை ஒரு முறை பார்த்துக் கொண்டு இரவு வேட்டைக்குப் புறப்பட்டு விடுகிறது தாய் ஆந்தை. தானும் வயிறு நிறைய உண்ணவேண்டும் தன் குழந்தை கட்கும் ஏதேனும் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்!

## நிலவொளியில் ஆந்தை!

ஆந்தைகளுக்கு இரவில் நன்கு கண் தெரியும்! இருந்தாலும், நிலவு வெளிச்சம் இருந்தால் தான் ஆந்தைக்கு மிகவும் கொண்டாட்டம்! நிலத்தில் பூச்சிகளைப் பிடிப்பதற்காக அங்கும் இங்கும் ஓடியபடி இருக்கும். சுண்டெலிகளையெல்லாம் எளிதில் ஆந்தை நிலவு வெளிச்சத்தில் பிடித்து விடும். தாய் ஆந்தைக்கு ஒரு சுண்டெலி கிடைத்தது. முதலில் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது. ஆந்தையும் குஞ்சுமானு லும் வாயும் வயிறும் வேறு தானே? அப்பொழுது 'ஊஊகூஉ' என்றொரு ஒலி கேட்கிறது. ஆம்! தந்தை ஆந்தையின் குரல் ஒலி! பசியால் துடிதுடிக்கும் குஞ்சுகளை எவ்வளவு நேரம்தான் தந்தை ஆந்தை சமாதானம் செய்துகொண்டிருக்க முடியும்! தாய் ஆந்தைக்கு வெட்கமாகப் போய்விட்டது! வழியில் எதனையாவது பிடித்துக் கொண்டு போய்க் கொடுக்கலாம் என்ற நம்பிக்கையில் இலந்தை மரத்தை நோக்கித் திரும்புகிறது! அந்தோ இரக்கம்! வழியில் குயிலால் வஞ்சிக்கப்பட்ட ஒரு கூட்டிலிருந்து விழுந்த இறகு முளைக்காத சிட்டுக் குருவியின் உடல் அதன் கண்ணில் படுகிறது. அதனைக் கால்களால் எடுத்துக்கொண்டு தாய் ஆந்தை குஞ்சுகளுக்கு முன்னர் வந்து அமர்கின்றது. எலியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த குஞ்சுகளுக்கும் நான்கு இறகும் எலும்பும்தான் கிடைத்தன.

## பகலில் தலைகாட்ட உரிமையில்லை

இரவில் நன்றாக ஓடியாடும் ஆந்தைகளின் கண்கள் பொழுது விடிந்துவிட்டால் கூசிச் சுருக்கி விடுகின்றன. எனவே, ஆந்தைகள் விடிவதற்குள் வேட்டையை முடித்துக் கொண்டு பொந்திற்குத் திரும்பி விட வேண்டும்!

ஆனாலும், போதுமான அளவு இரை கிடைக்காத காலத்தில் குஞ்சுகளின் பசியை எப்படிப் பெற்ற ஆந்தைகளால் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தாய் ஆந்தை இறந்த சிட்டுக் குருவிக் குஞ்சுகளோடு பொந்திற்குத் திரும்பியதைக் கண்ட தன் தந்தை ஆந்தை மீண்டும் ஒரு முறை வேட்டைக்குப் புறப்படுகிறது! கீழ்வானம் வெளுக்கத் தொடங்கி விட்டது. பறவைகள் எல்லாம் விழித்தெழுந்து விட்டன. இனி ஆந்தைகள், வெளியில் நடமாட முடியுமா? தந்தை ஆந்தையை ஒரு சிட்டுக் குருவி கண்டுவிட்டது. அவ்வளவுதான் 'கீ காச் மூச்' என்ற பேரொலி எழுந்துவிட்டது; சிட்டுக் குருவி படை திரண்டுவிட்டது! தந்தை ஆந்தையை விரட்டிக் கொண்டு அதன் பொந்துவரை குருவிகள் வந்து விட்டன!

## ஆந்தைகள் பற்றிப் புலவர்கள்

ஆந்தையின் வாழ்க்கைப் போராட்டம் இப்படி ஒவ்வொரு இரவும் நடைபெற வேண்டியிருக்கிறது. நம் தமிழ்ப் புலவர்கள் ஆந்தையினை நன்கு கவனித்திருக்கின்றனர். ஆந்தையின் வளைந்த அலகு, இரவிலும் தெரியும். தெளிந்த கண், கூர்மையான நகம், பறையறைவது போன்று ஒலிக்கும் குரல் ஆகிய செய்திகளை,

> "தேயா வளைவாய் தென் கண் கூர் உகிர் வாய்பறை அசாஅம் வலிமுந்து கூகை"

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆந்தையின் "கூஉ கூஉ" ஒலியைக் கேட்ட புலவர்கள் அதற்குக் "கூகை" என்ற பெயரையிட்டு அழைக்கின்றார்கள்; 'காகா' ஒலியெழுப்பும் காகத்தை 'காக்கை' என்று நாம் அழைப்பது போல! கூகை இரவில் குரல் எழுப்புவதுதான் இயல்பு. ஆனாலும் சிற்சில வேளைகளில் நண்பகலிலும் கூகைகள் கூவுவது உண்டு! இதனை

> "நண்பகலும் கூகை நகும்"
> "பகலும் கூவும் கூகை"

என்ற புறநானூற்றுத் தொடர்களால் அறியலாம்.

## ஆந்தையின் குரல்

ஆந்தையின் குரல் எப்பொழுதும் ஒரே தன்மையில் இருப்பதில்லை. மாறி மாறி ஒலிக்கும் பறையொலி போன்று ஆந்தையும் வேறு வேறு குரலில் மாறி மாறிக் கூவும்! இதனை "வேறுபடு குரல் வெவ்வாய்க் கூகை" என்று புலவர்கள் கூறுவதால் அறியலாம். ஆந்தைகள் எழுப்பும் ஒலி சில சமயம் அழுகுரல் போன்றும் இருக்கும்! இதனை "அழுகுரல் கூகையோடு ஆண்டலை விளிப்பவும்" என்ற பட்டினப் பாலை அடி விளக்கும். இறந்தவர்க்காக மக்கள் அழுவது போல, ஆந்தையும் இறந்தவர்களின் பெயரைச் சொல்லிச் சொல்லி அழைத்து அழும் என்பதும் புலவர்களின் கற்பனை! இதனை "சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்" என்ற மணிமேகலை அடியாலும் அறியலாம். இன்னும் சில புலவர்கள் ஆந்தை

யின் "கூஉகூஉ" ஒலியைச் சொல்லாலும் வடித்துக் காட்டியிருக்கின்றார்கள். இறந்த மனிதர்களை எரிக்கும் சுடுகாட்டில் காக்கையும், கூகையும், பேயும் இருக்கும்! இதனை,

"வாய்வன் காக்கையும்
கூகையும் கூடி பேயாய
மொருங்கு பொட்டாங்கு வழங்
கும் காடு......"

என்ற புறநானூற்று அடிகள் விளக்கும். சுடுகாட்டுக் கூகைகள் வேறு என்ன சொல்லப்போகின்றன? 'சிட்டுக்குருவி' 'வெட்டிப் புதை' என்று முழங்குகின்றன! இதனை,

"பொத்த அறையுட் போழ்
வாய்க்கூகை சுட்டுக் குவி
எனச் செத்தோர்ப் பயிரும்"

என்ற புறநானூற்று அடிகள் விளக்கும்!

**ஆந்தைகளில் பலவகை**

ஆந்தைகளிலும் பலவகை உண்டு. நாம் நாள்தோறும் காணும் ஆந்தைகள் புள்ளி ஆந்தைகள் (Spott Owlet) என்று சொல்லப்படும் சிறிய இனத்தைச் சேர்ந்தனவாகும். இவைகள் பொழுது போனதும் வீட்டுச் சுவர்களிலும், வேலிக் கம்புகள் மீதும், தந்திக் கம்பிகள் மீதும் கூட வந்து அமர்ந்திருக்கும்! உலகத்தின் வட பகுதியிலுள்ள குளிர்ந்த நாடுகளில் வெள்ளாந்தை (White Owl) என்று சொல்லப்படும் வெண்மை நிற ஆந்தைகள் இருக்கும். இவை பகலிலும் வெளியில் வந்து பறந்து திரியும்.

—"நவ இந்தியா"


**"ஆரம்பக் கல்வி"**
**ஆபீஸ்.**
**94–95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

*முக்கிய அறிவிப்பு*

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# உரக்கப் படிப்பது கல்வியூட்டச் சிறந்த வழி

ஓர் கல்லூரியில் இரு மாணவர்கள் பேசிக் கொண்டார்கள். "என்னடா, ஆச்சரியமாயிருக்கிறதே! இந்தக் கதையில் வரும் அத்தனை பாத்திரங்களின் பெயர்களும் உனக்கு எப்படித் தெரிந்தது? நேற்றுதானே வாத்தியார் இதை நமக்குப் படித்துக் கொடுக்க ஆரம்பித்தார்" என்று வியப்புடன் ஒரு மாணவன் கேட்டான்.

"போடா, போ! இது பிரமாதமா! நான் குழந்தையாயிருந்தபோது தினந்தோறும் மாடியில் மாலையில் காற்று வாங்கும் நேரத்தில், அம்மாவுக்கு அப்பா புஸ்தகக் கதைகளை வாசித்துக் கூறும்போது நானும் கவனமாகக் கேட்டுவந்திருக்கிறேனடா" என்று அலட்சியமாகப் பதிலளித்தான் மற்றவன்.

அவர்கள் பேசிக் கொண்டது மகாகவி ரவிந்திரநாத் தாகூரின் 'படகுச் சேதம்' என்ற நாவலைக் குறித்தே. அந்த வருடம் அது அவர்களுக்கு இன்டரில் ஆங்கில நான்டிடெயில்டு புஸ்தகமாக, சர்வகலாசாலையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

தாகூர் எழுதியவற்றை மட்டுமல்ல, தமிழில் தற்காலம் வெளிவருகிற புதிய இலக்கிய புத்தகங்களையும், டிக்கன்ஸ், ஷேக்ஸ்பியருடைய புஸ்தகங்களையும் கூட; வீட்டில் குழந்தைகளும் மாணவர்களும் விரும்பிக் கற்பதற்கு சிறந்த வழி, வீட்டில் குறிப்பிட்ட ஒரு வேளையின் போது, இரவில் படுக்கைக்கு அனைவரும் போகுமுன்பாக, அல்லது மாலை போஜனத்திற்குச் சிறிது முன்பாக (இந்த நேரங்கள் அனைவருக்கும் சௌகரியமாக அமைய வேண்டும்) அவற்றை நீங்கள் உரக்கப் படிப்பதே.

உரக்கப் படிப்பது ஒரு கலை. இலக்கிய அழகு உரக்கப் படிக்கும்பொழுது தனியாக வெளிப்படுகிறது. முக்கியமாக எனக்குத் தெரிந்த ஒரு ஆசிரியை கூறியதை இங்கே குறிப்பிடுகிறேன். இந்த அம்மணி நீண்டகாலம் உபாத்தியைத் தொழில் பார்த்தவர். அநேக வருஷங்களாக மாணவிகளுக்கு இலக்கியமும் போதித்து வந்திருக்கிறார். திடீரென்று சமீபத்தில் அவருடைய கண் பார்வையை இழந்து குருடாகிவிட்டார். இப்போது தனக்குப் பிடித்தமான நவீன இலக்கியப் பகுதிகளை, பிறர் உரக்க வாசிக்கும்படி செய்து உட்கார்ந்து, கேட்டு, ரசித்து வருகிறார். அவர் கூறுவது இது. தாம் முன்பு சுவையற்றது என்று எண்ணிய பகுதிகளில் முழு அழ

கும் இப்பொழுதுதான் உரத்து வாசிக்கக்கேட்பதின் மூலம் தமக்கு வெளிப்படுவதாகக் கூறுகிறார். இது 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்னும் கூற்றைப் போலிருந்தாலும் மிகவும் உண்மையே. அழகாக வாசிப்பதற்கு அறிந்தவர் அவ்வாறு செய்வாரானால் 'நாராசம்' போன்றிராது. குளிர்மையுடனும், இனிமையுடனும், சொல், அதின் பிரயோகத்தின் அழகு இவை நமக்கு வெளிப்படும். குறிப்பாக, இளங் குழந்தைகளின் உள்ளத்திலே இலக்கியத்தை இவ்வாறு கற்றுக் கொள்ளுகையில் தோன்றும் நினைவுகள் மங்கிப் போவதில்லை. பிரகாசமாக, தெளிவாக, என்றைக்கும் நிலைத்திருக்கும். இருந்தாலும், முதன் முதல் இவ்வாறு அவர்களுக்கு வாசித்துக் காட்டும் பொழுதே, பெர்னட் ஷாவைத் தாடியுடன் அவர்கள் முன் நிறுத்தி விடாதீர்கள். சிறிய கதைகளைத் தெரிந்து வாசித்துக் காட்டி, அவர்கள் ரசிக்கும்படி செய்து, பிறகு மெதுவாக அவர்கள் அறிவுக்கெட்டும் வகையில் உள்ள சிறிய இலக்கிய கதைகளையும், கட்டுரைகளையும், மொழி பெயர்ப்புகளையும், முடிவாக மூல பாஷையிலும் அவற்றைக் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். அந்தந்த மொழிகளிலேயே அவ்வவற்றை அறிந்து கொள்வதில் புதிய அழகு தோன்றுவது இயற்கையே அல்லவா? இரவு தோறும் குழந்தைகள் படுக்கைக்குப் போகு முன், இவ்வாறு அவர்களுக்கென்று சிறு கதைகளைத் தான் வாசித்து வந்தது அச் சிறுவர் தங்கள் இளவயதிலேயே வகுப்பில் கதைகள் கட்டுரைகள் வரைவதற்குப் பெரிதும் துணையாயிற்றென நற் பழக்க வழக்கங்களும் சிறந்த நடத்தையுமுடைய மூன்று சிறுவர்களின் தாயாகிய ஓர் பெண்மணி கூறுகிறார்.

சிற்சில சந்தர்ப்பங்களிலே நம்மை யறியாமலே நாம் பேசுகையில், பிறர் உபயோகித்த அதே வார்த்தைகளை உபயோகிக்கிறோம் அல்லவா? அவ் வார்த்தைகள் நம் மனதில் ஆழப் பதிந்திருந்தன. தக்க சமயத்தில் நினைவிற்கு வந்து உதவின. எவ்வாறு நீங்கள் அவற்றை முதன் முதலாக அறிந்தீர்கள்? யாரோ உரக்கப் பேசுகையில் அவ் வார்த்தைகளை உபயோகித்ததை நீங்கள் கேட்டிருக்க வேண்டும். உங்களைப் போலவே உங்கள் குழந்தைகளும், உங்கள் துணையுடனே, பிற்காலத்தில் அவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப் படவிருக்கும் நல்ல இலக்கியக் கதைகள், பெருங் கட்டுரைகள், இவற்றைக் குறித்து வீட்டிலேயே சிறிது அறிந்து கொள்வது, பிற்காலத்தில் அவர்களுடைய கல்வி வளம் பெருகுவதற்கு நல்ல துணை தானே!

வெறுமனே வாசித்துக்கொண்டு போவதைவிட, வார்த்தைகளைச் சரியாக, அழுத்தம் திருத்தமாக உச்சரிப்பதற்கு அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வரு

வது மிகவும் நல்லது. அறிவுக் கடுத்த வகையாகவும், சுவாரஸ்ய மாகவும் இருக்கும். இத்தகைய பல வகைக் கல்வியையும் வீட்டி லேயே ஆரம்பித்து வைப்போமா ணல், பள்ளிக்குச் செல்லும் போதும் அவர்களுடைய மனம் அதிலேயே பதிந்து காணப்படும். பகற் கனவு காணுவதும், வீண் காரியங்களின் மீது நாட்டம் கொள்ளுவதும் தவிர்க்கப்படும். வீட்டிலே கேட்டு பச்சிளம் மன திலேயே பதிந்து வரும் யாவும் நீண்ட காலத்திற்கு அவர்க ளுடைய நினைவில் இருக்கும். ஏன்? ஒருபொழுதும் நினைவி னின்று அகலாது எனவும் உறுதி யுடன் நம்பலாம். கிட்டுவின் எண்பத்து நாலு வயது தாத்தா கூட, பழைய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பெருக்கல் வாய்பாடு, இவற்றைத் தளர்பாட மாகப் பேரனுக்குப் படித்துக் கொடுக்க முடியும். 'இளமையில் கல்வி சிலையிலெழுத்து' என்ப தற்கு அது பெரும் அத்தாட்சி அல்லவா? நாமறியாமலே எதை யும் நாம் (நம்முடைய உள் மனது) தெரிந்து வைத்திருக் கிறது என்பது இப்படித்தான்!

நன்றாக வாசிக்கிறது ஒரு கலை. படிக்கும்போது, குரலை உயர்த்த வேண்டிய விடத்தில் உயர்த்தி, தாழ்த்த வேண்டிய விடங்களில் தாழ்த்தி, சொல்லழகும், நடை யழகும், கருத்தழகும், குரலில் பிரதிபலிக்கச் செய்து, உள்ளத் தின் உணர்வு எழுத்தில் கலந்து, குரலில் பொருந்தி, அனைவருக் கும் கேட்கும்படி வாசிக்கவேண் டும். கதைகளுடன் நிறுத்தி விடாமல், அறிஞர்களின் ரசா யன, பௌதீக கட்டுரைகள், பல கலைகள் பற்றிய குறிப்புகள், இவை அனைத்தையும் குழந்தை களுக்கு வாசித்துக் காட்டி, அவர் கள் ஒருவருடன் ஒருவர் தர்க்க மாடவும், அபிப்பிராயங்கள் கூறவும் இடமளித்து, பிணக்கை யும் அபிப்பிராய பேதத்தையும் தீர்த்து வைத்து நீங்களே வழி காட்டி, கலைக்கோவிலாகிய குழந் தையின் அழகிய பிஞ்சு உள்ளத் தில் நீங்களே யாவையும் புகட்ட வேண்டும்.

—"நல்வழி."

---

ஒரு மனிதனுக்கு நீ செய்த உதவிகளை அவனிடம் அடிக்கடி நினைப்பூட்டிக் கொண்டிருப்பது, அவனைப் பழிப்பது போல ஆகும். அதனைச் செய்யாதே.

—டெமாஸ்தனிஸ்.

# தைத் திருநாள்

காரைக்குடி சி. என். நாச்சியப்பன்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது கிராமியப் பழமொழி. கிராமத்து மக்கள், தை மாதத்திற்கு இரண்டு மாதங்கள் முன்பே எந்தக் காரியத்திற்கும் தை பிறக்கட்டும் என்பார்கள். "பெண்ணுக்கு எப்பொழுது கல்யாணம்?" என்று கேட்டால், "தை பிறந்துதான் பார்க்க வேண்டும்!" என்பார்கள். "ஊருக்கு எப்பொழுது புறப்படுகிறீர்கள்?" என்றால், "தை பிறந்து தான்" என்பார்கள். கொடுக்கல், வாங்கலுக்கும் தை பிறக்க வேண்டும். கஷ்டப்படுகிற மணிதர்களும் தை மாதத்தைத்தான் நம்பிக்கொண்டிருப்பார்கள். இப்படி எல்லா மனிதர்களும் தை மாதப் பிறப்பை எதிர்நோக்கியிருப்பதன் காரணம் என்ன? முக்கியமான காரணங்கள் இல்லாமல் இல்லை. முதலாவது காரணம் தை மாதத்தின் மேலுள்ள நம்பிக்கை! இரண்டாவது காரணம், அறுவடையாகி தை மாதம் தானியம் கைக்கு வந்துவிடும். தானியம் கைக்கு வந்தால் தனம் கைக்கு வந்த மாதிரி! நல்ல பணப் புழக்கம் ஏற்படும். கிராமமெங்கும் பொருளாதார வளம் நிறையும். மாதக் கணக்காகப் பாடுபட்ட குடியானவர்கள் - உழவர்கள்—சம்சாரிகள் இவர்களின் இன்னல்கள் நீங்கும். தை மாதம் அறுவடையில் வரும் பணத்தைக் கொண்டு எந்தக் கலர்ச் சேலை வாங்குவது என்று ஒவ்வொரு குடியானவப் பெண்ணும் ஆறு மாதங்களுக்கு முன்பே கனவு கண்டுகொண்டிருப்பாள். உழவன் புது மாடு வாங்கத் திட்டம் தீட்டியிருப்பான். மிராசுதார் புதிய நிலத்திற்கு அடிப்போட்டிருப்பார். சம்சாரி வீடு கட்ட நினைப்பான். இவர்களின் கனவெல்லாம் நனவாகும் மாதம் தை மாதம்!

மூன்றாவது காரணம், ஆதி நாளில் தமிழ் வருடத்தின் முதல் மாதம் தை மாதமே! காலப் போக்கில் சித்திரை மகுடம் பூண்டது. வைகாசி வாழ்த்துக் கூறியது. ஆனி அடுத்து நின்றது. ஆடி நான்காவது இடத்தைத் தேடிக்கொண்டது. ஆவணியும் புரட்டாசியும் ஐந்தும் ஆறும் ஆயின. ஐப்பசியும், கார்த்திகையும் ஏழும் எட்டும் ஆனபின், மார்கழி ஒன்பதாகி, தை பத்தாவது மாதமாகி விட்டது. தமிழ் வருடத்தில் தை முதல் மாதமாக இருந்தது என்பதற்கு, தைப் பொங்கலே போதுமான சான்று! தை மாதம் முதல் நாள் பொங்கல் திருநாள். இந்தத் திருநாளுக்கென்று தேதி பார்க்க வேண்டிய அவசியமில்லை. மாதப் பிறப்பை மட்டும் பார்த்தாலே

போதும். ஏனைய திருநாட்களுக்கெல்லாம் அப்படியில்லை. தீபாவளித் திருநாளை எடுத்துக்கொண்டால், அது ஐப்பசிமாதம் ஆண்டுக்கொரு தேதியில் வரும். மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரைத் திருவிழாக்கள் எல்லாமே அப்படித்தான். இவையெல்லாம் நாள், நட்சத்திரங்களைப் பார்த்துக் கணிக்கும் திருவிழாக்கள். பொங்கல் விழா, இயற்கையான திருநாள்! அதனால் தான் அதைத் தை மாதம் முதல் தேதி கொண்டாடுகிறோம்.

நான்காவது காரணம், பண்டம் மாற்றும் முறையிருந்த பண்டைக் காலத்தில் இன்று பவுனுக்குள்ள மதிப்பு, அன்று நெல்லுக்கு இருந்தது. நெல்தான் ஜீவநாடி. இன்றும் சில கிராமங்களில் காணலாம். நெல்லுக்கு இலந்தைப் பழங்கள் விற்பார்கள். நாவற்கழங்கள் விற்பார்கள். குழந்தைகளுக்குரிய தின்பண்டங்கள் விற்பார்கள். நம் வீட்டுக் குழந்தைகள்கூட, தாயாருக்குத் தெரியாமல் நெல்லை அள்ளிக்கொண்டு ஓடுவார்கள். பழக்கூடைக்காரி 'சரிக்குச்சரி' என்பாள். 'எப்படியானாலும் சரி' என்று பழத்திலுள்ள ஆர்வத்தில் நெல்லைப் போட்டுவிட்டு, பழத்தை வாங்கி வந்து விடுவார்கள் குழந்தைகள். நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்களில் வாழும் 'தோடர்கள்' என்னும் வகுப்பினர் எருமை மாட்டைத்தான் செல்வமாகக் கருதுகின்றனர். அதிகமாக எருமை மாடுகள் வைத்திருப்பவர்தான் அவர்களில் பணக்காரர். சம்சாரிகளில் அதிகமாக நெல் வைத்திருப்பவர்களைத்தான்வசதி உள்ளவர்கள் என்று சொல்லுவார்கள்.

அறுவடையாகி வந்த பவுன் போன்ற செந்நெல்லைக் குத்திப் புத்தரிசியாக்கி, புதுப் பாலில் கலந்து, புதுச் சுவையுடன் உண்டு புத்தாண்டை வரவேற்றிருக்கிறார்கள் பழந் தமிழ் மக்கள். நாமும் இன்று அவ்வாறுதான் செய்கிறோம். மாதம் தான் மாறிவிட்டது. செந்நெல்லும், செங் கரும்பும், பச்சைப் பசேலென்ற அவரைக்காயும் கண்ணுக்குக் குளிர்ச்சியும், நாவுக்கு ருசியும் வாய்ந்த நல்ல உணவுவகைகள். சர்க்கரை வள்ளிக் கிழங்கும், பாலும், சர்க்கரையும் உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதப் பொருள்கள். இவைகளை உண்டால் நா இனிக்கும்; இதயமெல்லாம் இனிக்கும்; பால் பொங்கும் பொழுது மக்களின் மனதில் மகிழ்ச்சி வெள்ளமே பொங்கும். சூரிய பகவானை வானெங்கும் வாழ்த் தொலியுடன் சங்கை ஊதி, பொங்கிவரும் புதுப் பாலில் கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து, புத்தரிசியை அள்ளி புதுப் பானையில் போடும் பொழுது இல்லத்தரசியின் உள்ளம் பூரித்துப் போகும். இது நாள்வரை ஏரைப் பிடித்துப் பாடுபட்டவனின் மனம் ஆனந்தத்தால் பொங்கும். குழந்தைகளெல்லாம் குதூகலத்தால் கூத்-

தாடும். குடும்பமே கோவிலைப் போலத் தோன்றும். மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடும். எங்கும் இன்பம், எங்கும் மங்கல வாழ்த்தொலிகள், எங்கும் புதுமை என்ற பூரிப்பு. இவை களில் மக்களின் மனங்கள் தோய்ந்து நிற்கும். "புதுப் பானையில் மங்கலமாகப் புதுப் பால் பொங்கி விட்டது. இது வரை நாம் பட்ட கஷ்டங்களெல் லாம் இன்றோடு மறைந்து விட் டன. இனிமேல் நமக்கு என்ன கவலை?" என்று மன நிம்மதி அடைவார்கள் பெரியவர்கள். உண்மையும் அதுதான். கல்யா ணத்திற்காகக் காத்திருக்கும் பெண்களுக்குக் கல்யாணம் நடக் கும்.

இவ்வாறு பொங்கல் திருநாளு டன் தை மாதம் பிறக்கும். மறு நாள் மாட்டுப் பொங்கல். மாட் டைப் போல மனிதனுக்கு உழைக்கும் ஜீவன் உலகத்தில் ஒன்றுமேயில்லை. நமக்குத் தேவையில்லாத பொருள்கள் அனைத்தையும் நாம் மாட்டுக்குப் போடுகிறோம். அவற்றை உண்டு விட்டு மாடு நமக்குத் தேவை யான பொருள்களைத் தருகிறது. பழத்தைத் தின்றுவிட்டு வாழைப் பழத்தோலை மாட்டுக்குப் போடு கிறோம். பாசிப்பயறு, நெல் இவற்றில் பருப்பு, அரிசி இவை களை எடுத்துக் கொண்டு உமியை மாட்டுக்குப் போடுகிறோம். வெந்த அரிசியிலிருந்து வடித்த தண்ணீரை (வடிச்ச தண்ணி) மாட்டுக்கு ஊற்றுகிறோம். எள் ளிலிருந்து எண்ணெயை எடுத் துக்கொண்டு, பிண்ணாக்கை மாட் டுக்குப் போடுகிறோம். நெற் கதிரிலிருந்து தானியத்தை எடுத் துக்கொண்டு, காய்ந்த வைக் கோலை மாட்டுக்குப் போடு கிறோம். இவை யெல்லாம் மனித னுக்குத் தேவையில்லாத பொருள்கள். இவைகளைத் தின் னும் மாடு மனிதனுக்கு முக்கிய உணவான பாலைத் தருகிறது. பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் முதலியவற்றை மனி தன் தன் அறிவால் ஆக்கிக்கொள் ளுகின்றான். இவை யெல்லாம் சத்துள்ள உணவுகள். மாட்டுச் சாணம் அடுப்பிற்கு, மருந்திற்கு, திருநீறு ஆக்குவதற்கு, வீட்டைச் சுத்தம் செய்வதற்கு இன்னும் பல காரியங்களுக்குப் பயன் படு கிறது. வண்டி மாடு சவாரிக்கும், உழவு மாடு உழுவதற்கும் உதவு கிறது. விவசாயத்தை முக்கிய மாகக் கொண்டுள்ள தமிழகத்தில் மாடு இல்லையேல் மனிதனில்லை என்பது உண்மைதான். இப்படிப் பட்ட மாட்டிற்கு என்று ஏன் ஒரு நாளை மாட்டுப் பொங்கலாக் கக் கூடாது என்று தான் பழந் தமிழர்கள் மாட்டுப் பொங்கலைத் துவக்கியிருக்கிறார்கள்.

மாட்டுப் பொங்கலன்று கிரா மங்களில் மஞ்சு விரட்டு விடுவது வழக்கம். இது ஒரு வீர விளை யாட்டு! மாடுகளை விரட்டி மஞ்சு விரட்டு விளையாடினால், புழுதி மேகமண்டலத்தை எட்டி, அத னால் மழை பொழியும் என்பது நம்மவர்களின் நம்பிக்கை. கட்டுக்

கடங்காத காளைகளைக் கட்டிப் பிடிப்பவர்க்கே தாலி கட்டுவதாக பிடி கொடுக்காத பெண்கள் பேசித்திரிவதும் உண்டாம்! இது பழங்காலத்துக் கிராமியக் கதை. இன்றைய இலக்கியச் சித்திரம், எழுத்தாளர்களின் கற்பனைக் கருவூலம். பழந்தமிழ் நாட்டின் படப் பிடிப்பு!

பொதுவாக, பொங்கலும் மாட்டுப் பொங்கலும் தூய தமிழ்த் திரு நாட்கள். அதில் பால் மணம் மட்டுமல்ல, தமிழ் மணமும் கமழுகிறது. தாயகத்தின் பண்பும் மிளிருகிறது. இத்தகைய பொன்னை பெரு நாளைக் கொண்டாடி மகிழ்வோமாக.

—"சிவாஜி"

---

வெற்றிச் செய்தி

# அசெம்பிளியில் முதல்வர் தகவல்

## இன்னும் ஒன்றிரண்டு தினங்களில் சர்க்கார் முடிவு அறிவிக்கப்படும்

ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பென்ஷன் தொகை குறைந்த பட்சம் மாதத்திற்கு இருபது ரூபாயாக உயர்த்தப்படவேண்டும் என்ற யோசனையை ராஜ்ய சர்க்கார் அங்கீகரித் திருப்பதாக முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் அவர்கள் அசெம்பிளியில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

'தினமணி'

# பி. யு. சி. மாணவர்கள் அனைவருக்கும் ஓர் ஆண்டு தேசிய சேவை

❊

## பொறுக்கி எடுத்த பட்டதாரிகளுக்கு இராணுவ அதிகாரிகளாகப் பயிற்சி

❊

### அரசினர் திட்டம் பற்றி அமைச்சர் தகவல்

சில குறிப்பிட்ட பட்டதாரிகளை ராணுவ அதிகாரிகளின் பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளவும், சர்வகலாசாலைப் படிப்பில் சேரும் எல்லா மாணவர்களையும் தேசிய சேவைக்குத் திரட்டிக் கொள்ளவும் சர்க்கார் ஒரு திட்டம் தயாரித்துள்ளது.

இந்தத் தகவலை லோக சபையில் பாதுகாப்பு மந்திரி திரு. சாவண் வெளியிட்டார்.

இந்தத் திட்டம் இப்பொழுது பூர்வாங்க நிலையில் இருப்பதாகவும், இதை இன்னும் பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

திட்டத்தின் விவரங்களைப் பாதுகாப்பு மந்திரி தெரிவித்தார். அவர் கூறியதாவது: பிரதி வருடமும் 10,000 புதுப் பட்டதாரிகள் சீட்டுப் போட்டுப் பார்த்து, பொறுக்கி எடுக்கப்படுவார்கள். அவர்களில் 2,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்களுக்கு அதிகாரிகள் பயிற்சிப் பள்ளியில் 6 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்குத் தற்காலிகப் பதவிகள் கொடுத்து, ராணுவப் பிரிவுகளில் சேவை செய்வதற்கு அனுப்பப் படுவார்கள்.

தேசிய சேவை திட்டத்தின் படி உயர்தர செகண்டரி படிப்பைப் பூர்த்தி செய்து, சர்வகலாசாலைப் படிப்பில் சேருவதற்கு முன்பு ஒரு வருட தேசிய சேவையில் 3 மாதங்களுக்குத் தீவிர ராணுவப் பயிற்சி அடங்கியிருக்கும். பாக்கி காலத்தில் முன்னணிப் பிரதேசங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ பாதுகாப்பு சம்பந்தமான பல்வேறு பணிகளை அவர்கள் செய்யவேண்டும்.

தேசியப் பாதுகாப்புத் திட்டத்தின்படி பி. யு. சி. மாணவர்கள் அனைவருக்கும் தீவிர ராணுவப் பயிற்சி அளிக்கப்படும். பிறகு முன்னணிப் பகுதிகளிலும் இதர இடங்களிலும் சாலைகள் அமைப்பு போன்ற பாதுகாப்புப் பணிகளைச் செய்வதற்காகப் பல படைகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு படைக்கும் இத்தகைய தேசிய சேவை மூலமாக மாணவர்களுக்குக் கட்டுப்பாடு உணர்ச்சி, உடலுழைப்பிலே பெருமிதம், தேசிய ஐக்கியத்தில் நம்பிக்கை முதலிய பண்புகள் ஏற்படும். மற்றும் இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்களைச் சிறந்த பிரஜைகளாக்க முடியும்.

தற்போது அமுலில் உள்ள

தேசிய மாணவர் படையில் சீனியர் பிரிவுக்குப் பதிலாகவே தேசிய சேவைத் திட்டம் அமல் நடத்தப்படும்.

---

## ஆசிரியர்களுக்குக் குறைந்த பக்ஷ ஊதியம்

சக்ளா கருத்து

பள்ளியில் எந்தப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியருக்கும் மிகக் குறைந்த பட்ச சம்பளம் ரூ. 100 ஆக இருக்க வேண்டும் என்று மத்திய கல்வி மந்திரி திரு. சக்ளா இன்று இங்கு தெரிவித்தார்.

அவர் இங்கு நிருபர்களிடம் பேசினார். கல்வி ராஜ்ய சர்க்கார் விஷயம் என்பதைத்தாம் உணர்ந்துள்ளதாகவும், ஆசிரியர்கள் சம்பந்தமான சில குறைந்த பட்சங்களைத் தூண்டுவதன் மூலமே இந்த லட்சியத்தை அடைய முடியும் என்றும் அவர் சொன்னார்.

நல்ல, தகுதியுடைய ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் அளிப்பதற்காக செலவில் ஒரு பகுதியைச் சமாளிப்பதற்கு ராஜ்யங்களுக்கு உதவ மத்திய சர்க்கார் தீர்மானித்துள்ளது என்றும், ஆசிரியர்களுக்கு சம்பளம் அளிக்கும் பொறுப்பு ராஜ்யங்களுடையது என்றும், இப்பொறுப்பை ஏற்க ராஜ்யங்கள் ஏன் மறுக்கின்றன என்பது புரியவில்லை என்னும் திரு. சக்ளா சொன்னார். நிர்வாக ஊழியர்கள், போலீஸார் ஆகியோரைவிட ஆசிரியர்கள் மிக முக்கியமானவர்கள். ஆகவே இவர்களுக்கு அதிக ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்றார் அவர்.


# புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி B. A., L.T.
(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 8 வீதம் கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# சந்திரனுக்கு மனிதன் செல்வதேன்?

— தாமஸ் பி. ஸ்டாஃபர்டு —

அமெரிக்க விண்வெளி விமானி

விண்வெளியை ஆராய்வதால் விளையும் நன்மைகளுள் தலையாயது அறிவு வளர்ச்சியே. பிரபஞ்சத்தில் மற்றப் பகுதிகளுடன் தொடர்பற்ற ஒரு தனி அல்ல பூமி.

சூரியனிலிருந்து வரும் கதிர்களும் பிற கிரகங்களிலிருந்து வரும் பொருள்களும் நம்முடைய வானிலையையும் செய்திப் போக்குவரத்தையும், ஆழக் கடல்களையும், நிலத்தின் உட்கூற்றையும் பாதிக்கின்றன. இன்னும் பல விளைவுகள் உண்டு; இவற்றுள் சில ஏற்கனவே தெரிந்தவை; சில சரியாய்த் தெரியாதவை; பல அறியாதவை. சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களில் நமது பூமியின் நிலையை நாம் நன்கு அறிய வேண்டுமானால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஆராய்ந்தால்தான் முடியும். இதையே முதலில் அறியாமல், பிரபஞ்சத்தில் நமது நிலையை எவ்வாறு அறிய முடியும்?

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள சூழல் முழுவதையும் ஆராய வேண்டியவன். அதில் ஒரு முயற்சியே அம்புலிப் பயணம், சந்திரன் வறண்டகாடு. ஒன்றும் முளைக்காத தரை; எவ்வகை உயிரினரும் அங்கு இருக்க இயலாது என்றுதான் நமது ஆராய்ச்சிகளெல்லாம் கூறுகின்றன. பின்னை மனிதனை அங்கு அனுப்புவானேன்? கருவிகளை அனுப்பி ஆராய்ச்சியைச் சிக்கனமாக முடித்துக் கொள்ளலாமே?

ஆளில்லாத செயற்கைக் கோள்களால் ஆராய்ந்தறிய முடியும் என்பது தெளிவு. ரேஞ்சர் கோள்கள் அம்புலித் தரையை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளன. 1962-ல் சுக்கிரனை அணுகிக் கடந்து சென்று அதைப்பற்றி வரலாற்றுச் சிறப்பான தகவல்களைக் கண்டுபிடித்து அறிவித்தது அமெரிக்க மாரினர்-2. சென்ற ஜுலை மாதம் செவ்வாயைப் படம் பிடித்து இன்னும் சிறப்பாக இயங்கியது மாரினர்-4. கோள்களை ஆராயக் கருவிகளை அனுப்புவது கைமேல் பலன் தரும். ஐயமில்லை.

ஆயினும் விண்வெளி நாம் பெரிதும் அறியாத ஒன்று. தெரியாத சூழ்நிலையைப் பற்றி நிரம்ப அறிவதற்கு ஏற்ற கருவிகளை நம்மால் செய்துவிட முடியாது. கருவிகளின் துணை கொண்டு மனிதனே சென்று ஆராய்வது மிகுந்த பலன் கொடுக்கும். விண்வெளியை அறிய வேண்டின் மனிதன் அங்கு சென்று பார்வை

யிட்டு இயற்கைச் சூழ்நிலையில் பரிசோதனைகள் நடத்த வேண்டும்—பூமியில் டார்வின் செய்தது போல.

தெரியாத இடத்துக்கு மனிதனை அனுப்புவதில் ஆபத்து இல்லாமல் இல்லை. என்றாலும், நியாயமாக முன் யோசனையுடன் இறங்கினால், ஆராய்ச்சி பலன் தரும் என்பதை நாம் அறிவோம். கொலம்பஸ் பயணத்துக்கு ஆபத்து நிரம்ப இருக்கத்தானே செய்தது.

சந்திரனுக்குப் பயணம் ஏகுகையில் எதிர்ப்படக் கூடிய இடையூறுகள் இதற்கு முன் நடந்த வேறு எந்தப் புதிய ஆராய்ச்சிப் பயணத்திலும் இல்லாத அளவுக்குப் பெரியனவாகவே இருக்கும். என்றாலும் மனிதனை முதலில் அங்கு அனுப்புதற்கு முன்பு பல கருவிகளைக் கொண்டு ஏற்கனவே ஆராய்ந்து விடுவோம்; இதனால் கூடியவரை தடைகளைக் கண்டுபிடித்து நீக்கியிருப்போம். இதுவரை நமக்குத் தெரிந்தவை என்ன?

விண்வெளியில் காற்று இல்லை. சூனிய வெளி அது. அங்கு செல்லும் மனிதனுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லையேல் அவன் இரத்தம் கொதித்து வெடித்து விடும். அவன் செல்லும் விண்வெளிக் கப்பலில் காற்றை நிரம்ப அடைத்து அழுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதை நன்கு பொருத்தி மூடிவிட வேண்டும். அப்பொழுதுதான் அவன் மூச்சு விட முடியும். வசதியாக இருக்க முடியும். விண்வெளிக் கப்பலில் விண் வீழ் கற்களால் துளை விழுந்தால் அல்லது எப்படியோ காற்று வெளியேறத் தொடங்கினால் என்ன செய்வது? அதற்காகத்தான் விண்வெளி விமானி காற்றழுத்தமுள்ள விண்வெளி உடுப்பு அணிந்து கொள்கிறார்.

விண்வெளியிலும் சந்திரனிலும் வெயிலடிக்கும்போது கொடிய வெப்பமும் மற்ற நேரத்தில் கொடிய குளிரும் இருக்கும். விண்வெளிக் கப்பலும் விண்வெளி உடுப்பும் இவற்றிலிருந்து பாதுகாப்பு அளிக்கும்.

பூமியைச் சுற்றியுள்ள வான் ஆலன் கதிரியக்க மண்டலம், சூரியனிலிருந்து கிளம்பும் கதிரியக்கம் இவற்றைப் பற்றிச் செயற்கைக் கோள்களால் நிரம்ப அறிந்திருக்கிறோம். இக் கதிரியக்கத்தின் அபாயத்தைக் குறைக்கப் பல வழிகளைத் தேடி வருகிறோம். சூரியன் எந்தக் காலத்தில் அதிகமாகவும் எப்போது குறைவாகவும் கதிரியக்கத்தை உமிழும் என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்: உயிராபத்தான சூரியக் கொந்தளிப்பு எப்போது நிகழும் என்பதை முன்கூட்டி அறிய இந்த ஆராய்ச்சி வகை செய்யும். வான் ஆலன் கதிரியக்க மண்டலத்தை விரைவில் கடந்து செல்லும் வழி தேடி அதைத் துருவி ஆராய்ந்து வருகிறோம். கதிரியக்கம் தாக்காவண்ணம் தடுக்கப் பல வகைக் கேடயங்களை உருவாக்குவதில் முனைந்திருக்கிறார்

கள், நம் தொழில் நுட்பசாலி கள்.

நிலாவுலகின் தரையைப் பற்றி நமக்கு இன்று அதிகம் தெரியாது. எனவே எப்படியும் பத்திரமாக இறங்கிவிடத் தக்க வாகனத்தை இன்று உருவாக்கிவிட இயலாது. தரை புழுதி நிறைந்துள்ளதானால் இறங்கும் விண்வெளிக் கப்பல் அதனுள் புதைந்து விடாதபடி அதற்கு நீண்ட கால்கள் வைத்துக் கொள்ளலாம் என்பது இன்றைய யோசனை. சந்திரன் தரைபற்றி நமது ரேஞ்சர் கோள்கள் பல தகவல்களைத் தெரிவித்திருக்கின்றன; அது எப்படிப்பட்ட தரைதான் என்பதை இனி அனுபவிக்கும் சர்வேயர் கோள்கள் திட்டவட்டமாகத் துலக்கிவிடும்.

இப்படியே இன்னும் பல அடிப்படைப் பிரச்னைகள் இருக்கின்றன. இவற்றைத் தீர்ப்பது எளிதல்ல; செலவும் பிடிக்கும்.

அண்மையில் ஒரு கேலிச் சித்திரம் பார்த்தேன். ஒரு பெரிய ஏவுகணை நிலாவுலகின் தரையில் நிற்கிறது. அதைச் சுற்றிப் பச்சை நிற நிலா மக்கள் நிற்கிறார்கள். பூமி மனிதர் சிலர் நிலாவை அடைந்து சுற்றிப் பார்த்துவிட்டுப் பூமிக்குத் திரும்பும் பொருட்டு ஏவுகணைக்குள் ஏறுகிறார்கள். அவர்களில் கடைசியாக ஏறுபவனைப் பார்த்து, நிலா மகன் ஒருவன், "எங்களைச் சும்மா வந்து காண 1,100 கோடி டாலர் செலவு! பூமி மகனே, இந்தச் செலவுக்குப் பெறுமா இங்கு வந்தது?" என்று கேட்கிறான். இதுதான் அச் சித்திரம்.

நானாக இருந்தால், "ஆம்" அதில் ஒரு டாலர் கூட வீண் செலவல்ல" என்று பதில் கூறியிருப்பேன். ஏனெனில், சந்திரனைப் பற்றியும் பிரபஞ்சத்தைப் பற்றியும் வேறு எந்த வழியிலும் கண்டுபிடிக்க முடியாதவற்றை இவ்வாறு கண்டுபிடிக்கிறோம். கண்டுபிடிப்பவை அறிவை வளர்க்கிறது. அறிவுதானே ஆற்றல்?.

---

## இரு ஆண்டுகளில் சென்னைக்கு டெலிவிஷன் திட்டம்; மார்ச்சில் ஆராயப்படும்: அமைச்சர் பட்டாபிராமன் தகவல்

சென்னை, டிச. 29—இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் சென்னைக்கு டெலிவிஷன் வசதி கிடைக்கும் என்று யூனியன் உதவி தகவல் ஒலி பரப்பு மந்திரி திரு. சி. ஆர். பட்டாபிராமன் இன்று இங்கு நிருபர்களிடம் கூறினார்.

சென்னை, ஹைதராபாத், சாத்யமானால் திருச்சிராப்பள்ளியிலும்கூட டெலிவிஷன் வசதியை ஏற்படுத்தும் திட்டங்கள் அடுத்த மார்ச்சில் பரிசீலிக்கப்படும். டெலிவிஷன் அபிவிருத்தித் திட்டம் துரிதப் படுத்தப் படுகிறது என்றார் அவர்.

அலகாபாத்தில் ஜனவரி 21 முதல் நடக்கும் 5 நாள் கும்பமேளா விழாவுக்கு வரும் 5லட்சம் மக்களுக்கு கட்டுப்பாடு ஏற்பாடுகளை ஒரு டெலிவிஷன் யூனிட்

மேற் பார்வையிட்டு, படம் பிடிக்கும்.

பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் சினிகாம் உப கிரகம் மூலம் நிகழ்ச்சிகளையும், புள்ளி விவரங்களையும் பரிவர்த்தனை செய்து கொள்வதற்காக சமீபத்தில் யு. எஸ். மற்றுமுள்ள நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டது. அவசியமான பதிவு சாதனங்கள் அமைக்கப் பட்டதும், இந்தியாவில் ஒளிபரப் பப்படும். அந்நியச் செலாவணி நிலைமை காரணமாக சாதனம் வருவது தாமதமாகியுள்ளது.

மத்திய அலை டிரான்சிஸ்டர் செட்டுகளை தயாரிப்பதை அதிகரிக்க உத்தேசிக்கப் படுகிறது. தென்கிழக்குஆசியாவுக்குத்தமிழ் நிகழ்ச்சி ஒலிபரப்பை டில்லியிலிருந்து சென்னைக்கு மாற்றும் யோசனை ஆராயப்படுகிறது. அந்நியச் செலாவணி நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டதும் அது மேற்கொள்ளப்படும்.

## பறக்கும் நீர்மூழ்கி அமெரிக்கா தயாரிக்கிறது

வாஷிங்டன், டிச 13—இந்து மகா சமுத்திரத்தில் ஏராளமாக இருக்கும் பறக்கும் மீன்களைக் காப்பியடிப்பது போல் அமெரிக்கக் கடற்படை இப்போது பறக்கும் நீர்மூழ்கிக் கப்பலைத் தயாரிப்பதற்கான திட்டங்களை வெளியிட்டுள்ளது.

எனினும் தொழில்நுட்ப அகராதியில் இது "நீர் மூழ்கும் விமானம்" என்று தான் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இதன் டிசைன் விமானத்தைப் போலத் தான் உள்ளது. யூஜின் ஹேண்டலர் முதலில் இவ்விதத் தயாரிப்புக்கு யோசனை கூறிய போது பெரும் சிரிப்புதான் கிளம்பியது. இப்போதோ இதன் மீது உண்மையிலே தீவிர கவனம் காட்டப்படுகிறது.

பறக்கும் நீர்மூழ்கியில் 3 ஜட் என்ஜின்கள் இருக்கும். இது மணிக்கு சுமார் 345 மைல் வேகத்தில் சுமார் 1150 மைல் தூரம் வானத்தில் பறந்து செல்லும் திறன் கொண்டதாக இருக்கும். இது கடலில் நீர்ப்பரப்பின் மீது இறங்கியதும் அதிலுள்ள நீர் அடைப்பு சாதனங்கள் செயல்பட அந்த விமானம் நீர் மூழ்கிக் கப்பலாகக் கடலுக்குள் அமிழ்ந்துவிடும். விமானியின் இயக்க அறை, யந்திரப் பிரிவுகள் ஆகியவை நீங்கலாக புகும்படி செய்யப்படும்.

அது நீர்மூழ்கிக் கப்பலாக கடலில் 150 அடி முதல் 200 அடி வரையிலான ஆழத்தில் மணிக்கு 6 முதல் 10 மைல் வேகத்தில் செல்வதாகவும், சுமார் 10 மணி நேரம் மூழ்கியிருக்கக் கூடியதாகவும் இருக்கும். மறுபடி கடல் மட்டத்துக்கு வருவது அதற்கு ஒரு பிரச்னையாக இருக்காது. அவ்வாறு வெளியே வந்ததும் அது மீண்டும் பறக்க ஆரம்பிக்கும்.

இப்புதிய பறக்கும் நீர்மூழ்கிக் கப்பல் மிக விசித்திரமானதாகக் கருதப்படுகிறது. இது பல காரியங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

# மதிய உணவு மானியங்களை, மதிய உணவுக் குழு செயலாளர்களிடம்

## அளிப்பதைப் பற்றிய திருத்தப்பட்ட அரசாங்க ஆணை

**Education—Elementary Education—Scheme for supply of School Meals to poor pupils in Elementary Schools—Payment of midday meals grant to Secretaries of Midday Meals Committees—Revised Orders—Issued.**

புதிய உணவு மானியத் தொகைகளை "செக்கு"கள் **(Cheques)** மூலம், மதிய உணவுக்குழு செயலாளர்களுக்கே அனுப்பவேண்டும் என்பதும், அவர்கள் அந்த மானியத் தொகைகளைப் பெற்று, அதற்குண்டான கணக்குகளைச் சரிவர நிர்வாகிப்பது அவர்களுடைய பொறுப்பு என்பதும் கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 104-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளாகும். பெரும்பாலான பஞ்சாயத்துக்கள். மதிய உணவுத்திட்டத்திற்காக, தங்கள் நிதிகளிலிருந்து இரண்டு பைசாக்கள் நன்கொடை அளிக்க தீர்மானங்கள் நிறைவேற்றி வருவதாகவும், ஆனால் இந்த நன்கொடைத் தொகைகளை செயலாளர்களால் "காலத்தில்" வசூல் செய்துகொள்ள முடிவதில்லை. என்பதாகவும், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே இது விஷயத்தில் ஒரு எளிய நடைமுறையை வகுக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கிராமப் பஞ்சாயத்துக்கள் தொகுப்பு நிதியிலிருந்து **(Village Panchayat Consolidated fund)** பஞ்சாயத்துக்களின் நன்கொடைத் தொகையை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் பெற்று, அத்துடன் அரசாங்கம் தம் பங்காக அளிக்கும் நன்கொடையையும் சேர்த்து, மதிய உணவு நிலைய செயலாளர்களுக்கு மொத்தமாக அனுப்பி விடலாம் என்பதே இக்கருத்தாகும்.

2. மேற்கண்ட கருத்தை தல நிதி கணக்காய்வுத் தலைவரின் ஆலோசனையோடு, கவனமாகப் பரிசீலித்த பின்னர், அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது :—

(அ) மதிய உணவுத் திட்டத்திற்காக நன்கொடை அளிக்க விரும்பும் பஞ்சாயத்துக்கள் (கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 126-ல் வகுக்கப்பட்டுள்ளபடி) அந்த நன்கொடையின் விகிதாச்சாரத்

தைக் குறிப்பிட்டு ஒரு தீர்மானத்தை, ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் நிறைவேற்றி, அந்தத் தொகையைப் பஞ்சாயத்துக்களின் கணக்குகளிலிருந்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துயூனியன் ஆணையாளர்கள் எடுத்துக் கொள்ள அவர்களுக்கு அதிகாரம் அளிக்குமாறு பஞ்சாயத்துக்கள் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், தேவைப்பட்டால் கல்வித்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு பஞ்சாயத்தும் அளிக்க வேண்டிய நன்கொடை அளவைப்பற்றி நிர்ணயம் செய்யவேண்டும்.

(ஆ) ஒவ்வொரு பஞ்சாயத்தினுடைய கணக்குகளிலும் உள்ள நிதி நிலைமையையொட்டி, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், பணப் பெட்டியிலிருந்தாவது, அல்லது கருவூலத்திலிருந்தாவது தலநிதி வைப்புக்கணக்குII-லிருந்தாவது தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அது பிறகு தல நிலகணக்கு I-ல் கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். இக்காரியத்திற்காக, பஞ்சாயத்தின் தீர்மானத்தையே ,ஆணையாளருக்குஅளிக்கப்பட்ட கொடுப்பு ஆணையாகக் கொள்ள வேண்டும். இவ்வாறு கிராமப் பஞ்சாயத்துக்கள் தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் தொகைகளை செலுத்துவது பற்றிய காரியத்தை, சிறு ரொக்கப் பதிவேடு (Petty Cash Book) மூலம் கவனித்து வரவேண்டும். (இந்த சிறு ரொக்கப் பதிவேடு பற்றிய விவரத்தை கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 223-ல் உள்ள பத்தி 3-ல் காணலாம்.)

(இ) அதன் பிறகே, பஞ்சாயத்தின் நன்கொடைத் தொகையுடன், அரசாங்கத்தின் மானியத்தையும் சேர்த்து, ஒரே "செக்கு" மூலம், தொகையை சம்பந்தப்பட்ட மதிய உணவுக் குழு செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. இது சம்பந்தமாக, கீழ்க் கண்ட கணக்கு நடைமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டுமென்று அரசாங்கம் மேலும் ஆணை பிறப்பிக்கிறது:—

(அ) கிராமப் பஞ்சாயத்துக்களின் தீர்மானங்களை ஒரு பதிவேட்டில் குறிப்பிட வேண்டும் அதற்கு நேராக, அத்தீர்மானங்களின் பேரில் பெற்ற தொகையையும், செலுத்திய தொகையையும் குறிப்பிட வேண்டும்.

(ஆ) இது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் நிதிகளில் வரவு வைக்கப்பட்ட தொகைகள் "C. பள்ளிக்கூட உணவுக் கணக்கு – வரவு-சாதாரணம் – மற்ற நன்கொடைகள்" (C. School Meals Account - Receipte -Ordinary-other Contributions) என்ற தலைப்பில் கணக்கு எழுதப்பட வேண்டும். அப்போதுதான் பள்ளிக்கூட உணவுத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து யூனியன்கள் அரசாங்கத்திடமிருந்து பெறும்

அரசாங்க மானியக் கணக்குகளைத் தனியாக வைத்திருக்க முடியும்.

(இ) மதிய உணவுக்குழுவுக்கு அளிக்கப்படும் தொகைகளை "9, மதிய உணவுக்குழுவுக்கு அளிக்கப்பட்ட மானியங்கள், (9, Grants paid to Midday Meals Cummittes),

(i) அரசாங்க மானியம்.

(ii) பஞ்சாயத்துக்கள் நன்கொடைகள்"

என்ற கணக்குத் தலைப்பில் எழுத வேண்டும்

(ஈ) பணம் அளிக்கும் ரசீதுகளில், அரசாங்க மானியமும், பஞ்சாயத்து நன்கொடையும் தனித்தனியாகக் காண்பிக்கப்பட வேண்டும்; இந்த இரண்டு தொகைகளுமே, மொத்த தொகையாகும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2658.)

"கிராம நலம்"

---

## வட துருவத்திற்கு உல்லாசப் பிரயாணம் செய்யலாம்
### பாலைவனங்களை ஏரிகளாக்கலாம்
### அணு யுகம் பற்றி டாக்டர் சி. பி.

அணுவின் சக்தி மூலம் வட துருவத்தை உல்லாசப் பிரயாணம் செய்வதற்குத்தகுந்த கவர்ச்சியான இடமாக மாற்றக் கூடிய காலம் வந்து கொண்டிருக்கிறது. பாலைவனங்களுக்கும் மத்தியில் ஏரிகளைச் சிருஷ்டிப்பதும் சாத்தியமாகி விடலாம். ஆகவே உலகிலே புல் பூண்டு முளைக்காத மிகவும் மோசமான இடங்களைக் கூட மிகவும் செழுமையான இடங்களாக மாற்றி விடலாம் என்று டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் இன்று அடையாற்றில் கணித கழகத்தின் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார். இந்தக் கருத்தரங்கு 10 நாள் நடைபெறும்.

டாக்டர் ராமசாமி அய்யர் மேலும் கூறினார் "சென்ற நூற்றாண்டின் இறுதியுடன் சர்வகலாசாலையில் எனது கணித, பௌதிகப் படிப்பு முடிந்து விட்டது. ஆனால் நான் பின் தங்கி விடவில்லை. இந்தத் துறையில் எனது அறிவை வளர்த்துக் கொண்டிருக்கிறேன். கணிதத் துறையில் புதிய பிரிவுகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. சமூக புள்ளி விவரங்கள், அணு சக்தி முதலியவற்றை உதாரணமாகச் சொல்லலாம். கணிதத்தில் இதை ஒரு புதிய அத்தியாயமாகச் சொல்லலாம்.

20வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அணுசக்தி பௌதிகம் ஏற்பட்டது. அணு கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து இந்தப்புதுமையான பௌதிகம் ஏற்பட்டது."

---

# ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்க விருதுகள்

சென்னை, ஜன. 26—1964 65–ம் ஆண்டுகளுக்கு, அரசாங்க விருதுக்குரிய ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மாநிலக் கமிட்டி ஒரு கல்வி மாவட்டத்துக்கு இரண்டு பேர் வீதம் 70 பேர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. மாநிலக் கமிட்டியில் செகண்டரி கல்வி நெறியாளர் திருவி.டி. டைட்டஸ் தலைவராகவும் திருமதி என் சண்முக சுந்தரம், திரு ராஜா அய்யர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் பணியாற்றினர்.

இந்த விருது பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 200 ரொக்கப் பரிசும் ஒரு சான்றுப் பத்திரமும் வழங்கப்படும்.

விருது பெற்றவர்கள் விவரம் வருமாறு:—

**சென்னை தெற்கு:**

திரு. எஸ். வைத்தியநாதன் (தலைமையாசிரியர், திரு. ராமகிருஷ்ணமிஷன் ஆரம்பப் பள்ளி சென்னை 17) திரு. பி. எஸ். நாகராஜராவ் (தலைமை ஆசிரியர் எஸ். எஸ் ராகவேந்திரராவ் ஆரம்பப் பள்ளி, திருவல்லிக்கேணி).

**சென்னை வடக்கு:**

குமாரி டி. பாலாம்பாள் (தலைமை ஆசிரியை, மாநகராட்சி மேல் நிலைப்ரைமரி பள்ளி சென்னை); திரு. சி. பஞ்சாட்சரம் (தலைமை ஆசிரியர் மாநகராட்சி ப்ரைமரி பள்ளி சென்னை).

**சைதாப்பேட்டை:**

திருமதி ஏ. ராஜாம்பாள் (தலைமையாசிரியை, பஞ்சாயத்து யூனியன் உயர் ஆரம்பப் பள்ளி, வில்லிவாக்கம்,) திரு ஏ. சம்பந்தம் (தலைமை ஆசிரியர், ராவ் சாகிப் சி. எம். எஸ். முதலியார் உயர் ஆரம்ப பள்ளி காஞ்சிபுரம்).

**செங்கல்பட்டு:**

திரு ஏ. எல்லப்பன் (தலைமை ஆசிரியர், பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி, (அச்சிறுபாக்கம்) திரு எம். வடிவேலு பிள்ளை (ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் பள்ளி நெற்குன்றம்).

**திருவள்ளூர்:**

திரு எஸ். ஆர். அண்ணாமலை (ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் பள்ளி, புது விளங்கை, செங்கற்பட்டு மாவட்டம்) திரு ஜி. முனுசாமி அய்யர் (ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி. பாதிரிவேடு, செங்கற்பட்டு மாவட்டம்).

**வேலூர்**

திரு ஏ. ராயப்பன் (ஆசிரியர் டான்பாஸ்கோ உயர் ஆரம்பப் பள்ளி வேலூர்) திரு ஆர். நரசிம்மன் (ஆசிரியர் சி. சி. ஏ. உயர் ஆரம்பப் பள்ளி தொரப்பாடி).

**திருவண்ணாமலை:**

திரு. எம். கிருஷ்ணசாமி (தலைமை ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன், வடார்க்காடு மாவட்டம் திருமதி எலிசபெத் மக்காரியாஸ் சார்லஸ் (ஆசிரியை ஆர்.சி. உயர் தர ஆரம்பப்பள்ளி போளூர் வடார்க்காடு மாவட்டம்).

**திருப்பத்தூர்:**

திரு. எஸ். காமலியேல் (ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் ஜூனியர் ஆதாரப் பள்ளி கல்புதூர்); குமாரி சாரதா (ஆசிரியை பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி, செங்கம், வடார்க்காடு மாவட்டம்).

**கடலூர்**

திரு. ஆர். தட்சிணாமூர்த்தி (தலைமை யாசிரியர், நகராட்சி சீனியர் ஆதாரப் பள்ளி சிதம்பரம்(; திரு. டி. நடராஜன் (ஆசிரியர். பஞ்சாயத்து யூனியன் ஜூனியர் ஆதாரப் பள்ளி, பரங்கிப்பேட்டை).

**விழுப்புரம்:**

திரு. எம். நடேச பிள்ளை (உதவி ஆசிரியர், ஜார்ஜ் உயர்தர ஆரம்பப் பள்ளி, வளவனூர்); திரு. ஏ. ராஜு முதலியார் (தலைமை ஆசிரியர், பஞ்சாயத்து யூனியன் சீனியர் ஆதாரப், பள்ளி வானூர்.)

**விருத்தாசலம்:**

திரு. எம். வெங்கடாசலம் (ஆசிரியர், பஞ்சாயத்து யூனியன் பள்ளி, ஆரம்பப் பள்ளி அவினங்குடி) திரு. எஸ். ராஜலிங்கம் பிள்ளை பஞ்சாயத்து யூனியன் பள்ளி, காந்தி குப்பம் வெண்ணெய் நல்லூர்.

**நாகப்பட்டினம்:**

திரு. என். எஸ். ராமநாதன் (ஆசிரியர், நிர்வாகி, தேசிய உயர் ஆரம்பபள்ளி, ஆதிச்சபுரம், தஞ்சாவூர் மாவட்டம்) திரு.கே.எஸ். கோபாலன், (தலைமை ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி, பருத்தியூர், தஞ்சாவூர் மாவட்டம்).

**தஞ்சாவூர்:**

திரு. ஆர். சாமிநாதன் (தலைமை ஆசிரியர் திரு சதாசிவ சீனியர் ஆதாரப் பள்ளி, தஞ்சாவூர்) திரு. டி. வி. ராமசாமி (தலைமை ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் சீனியர் ஆதாரப் பள்ளி தஞ்சாவூர்).

**மாயவரம்:**

திரு. கே. ராகவன் (தலைமை ஆசிரியர், ஆரம்பப் பள்ளி, மேலட்டூர் தஞ்சாவூர் மாவட்டம்) திரு. பி. எம். ராஜகோபாலன் (தலைமை ஆசிரியர், கும்பேஸ்வரர், திருமஞ்சனம் வீதி உயர் ஆரம்பப் பள்ளி, கும்பகோணம்).

# நக்கீரர் கழக வெள்ளி விழா

## கருத்தரங்கிலும் தமிழ்த் திருநாளிலும் பேராசிரியர்கள் பேருரை

சென்னை நக்கீரர் கழக வெள்ளி விழாவும் தமிழ்த் திருநாளும் சென்னை வாலாஜாரோட் "பாலர் அரங்கில்" 24-1-66-ல் காலை மாலை மிகச் சிறப்பாக நடை பெற்றது.

காலை வெள்ளிவிழா கருத்தரங்கு **"தாய்மொழி வாயிலாக உயர்கல்வி"** என்னும் பொருள் பற்றி பல துறைப் பேராசிரியர்களும் பேசினார்கள். இதற்கு மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் உயர்திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

கருத்தரங்கு திரு. நாடிமுத்து அவர்களின் இசையுடன் தொடங்கியது. வைணவக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் கு. இராமகிருட்டினன் வரவேற்றார். கழகச் சார்பில் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குப் புத்தாடை, திருச்சி திரு. அகிலாண்டநாயகி நிழற்படம், பட்டுத்துணியில் அச்சியற்றிய பாமாலை ஆகியவைகள் பாராட்டி அளிக்கப் பெற்றன.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் நக்கீரர் கழகப் பணிகளைப் பாராட்டியும் ஆக்கவேலைகளில் ஈடுபட்ட கழகத்தின் தொண்டுகளைப் பாராட்டுவதாகவும், மக்களுக்கும் நாட்டுக்கும் வேண்டற்பாலதான இத்தகைய கருத்தரங்கினை ஏற்படுத்திய கழகத் தமிழ்த் தொண்டினைப் போற்றுவதாகவும் கூறினார்.

பின்னர் "தாய்மொழி வாயிலாக உயர்கல்வி" என்பதைப் பற்றி முறையே வரலாறு, பற்றி டாக்டர். கே. கே. பிள்ளை அவர்களும், பொருளாதாரம் பற்றி டாக்டர் வே. சண்முகசுந்தரம் அவர்களும், அரசியல் பற்றி டாக்டர் சி. அ. பெருமாள் அவர்களும், மெய்ப்பொருள் பற்றி டாக்டர் வ. ஆ. தேவசேனபதி அவர்களும், உளவியல் பற்றி டாக்டர் தா. ஏ. சண்முகம் அவர்களும், விஞ்ஞானம் பற்றி டாக்டர் பி. திருஞானசம்பந்தம் அவர்களும், மருத்துவம் பற்றி டாக்டர் எம். நடராஜன் அவர்களும், பொறியியற் பற்றி பேராசிரியர் ப. முருகமாணிக்கம் அவர்களும் சட்டம் பற்றி மா. சண்முக சுப்பிரமணியம் (கட்டுரையாக எழுதி அனுப்பினார்) - ஆகியவர்கள் மிகச் சீரும் சிறப்புமாக "தாய்மொழி வாயிலாக உயர் கல்வி" உடனடியாகவே அமையலாம்; அமைய வேண்டும் எனத் தக்கச் சான்றுகளுடன் விளக்கிக் காட்டினார்கள்.

தலைவர் அவர்களும் இதனையே ஒப்பி, மிகச் சிறந்த பின்னுரையாக அனைவர்பேசிய கருத்துக்களையும் ஆதரித்துக் கூறினார்கள்.

## மீண்டும் மாலை 6 மணிக்குத் தமிழ்த் திருநாள்

மீண்டும் தமிழ்த் திருநாள் மாலை 6 மணிக்கு பல்கலைக்கழக இசைத்துறை மாணவியர் இறை வணக்கத்துடன் விழா தொடங்கியது.

திரு. சிறுவை, மோகனசுந்தரம் அவர்கள் தமிழ்த் திருநாள் அவசியம் பற்றி விளக்கி அனைவரையும் வரவேற்றார்.

விழாவினைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தொடங்கிவைத்து தமிழ்த் திருநாள் கருத்தினைப் பற்றியும், தோற்றுவித்த பேராசிரியர் கா. நமச்சிவாயர் அவர்களின் சிறப்புக்களையும், தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டு உணர்ச்சிகள் பற்றியும் — தமிழ் மொழிக்கு விழா எடுக்கும் இன்றியமையாமை பற்றியும் விளக்கினார்கள்.

தலைமை வகித்த தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் வே. கார்த்திகேயன் அவர்கள், நக்கீரர் கழக ஆக்கப் பணிகளை வரவேற்று, மொழி வளர்ச்சி பற்றிய ஆக்கவேலைத் திட்டங்களையும் - அவைகளை மேற்கொள்ளவேண்டிய முறைகள் பற்றியும் விளக்கினார்கள்.

பின்னர் டாக்டர் தருமாம்பாள் நினைவுக் கட்டுரைப் போட்டி, டாக்டர் சேதுப்பிள்ளை நினைவு கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற கல்லூரி மாணவிகளுக்கு வெள்ளிக்குவளை, பதக்கம், புத்தகம், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி மாணவிக்கு கா. நமச்சிவாயர் நினைவுப் பதக்கம் முதலியன டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்வழங்கினார்கள்.

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களுக்கு அவர்கள் அறத்தொண்டிற்காக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அளித்த பைலட் பேனா, புத்தாடை, புத்தகத் தொகுப்புகள் முதலியனவும், திருக்குறள் நாட்காட்டியும் ஒவ்வொருவருக்கும் வழங்கப் பெற்றன.

விழாத் தலைவர் திரு. வே. கார்த்திகேயன் அவர்களும், பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்களும் இவைகளை வழங்கி, இப்படி ஆக்கப்பணிகளில் ஈடுபட்ட கழகத்தின் தொண்டுகளைப் பாராட்டி உரைத்தார்.

அதன்பின் "ஏர்முனையும் போர்முனையும்" என்பது பற்றி பேராசிரியர் திரு. க. ம. திருநாவுக்கரசு, எம். ஏ., எம். லிட்., அவர்களும். "சொல்லாய்வும் ஒருமைப்பாடும்" என்பது பற்றி பேராசிரியர் திரு. ந. சஞ்சீவி. எம். ஏ., எம். லிட். அவர்களும் மிகச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்.

அனைவருக்கும் திரு. ஊ. ஜெயராமன் அவர்கள் நன்றி கூற நாட்டு வணக்கத்துடன் விழா இனிது நடைபெற்றது.

# கொடைப் பித்து

*["**தினமணி**" நாளேடு, தன் 28-12-65 இதழில் "கொடைப் பித்து" என்னும் தலைப்பில் எழுதியுள்ள இத் துணைத் தலையங்கம், சுவை ததும்பும் ஒரு செய்தியை மையமாகக் கொண்டு, ஏற்றம், மிக்க சில கருத்துக்களை எழில்பட எடுத்துக்காட்டுகிறது.]*

ஜோஸப் போனவிட்டா என்ற அமெரிக்கர் கிறிஸ்துமஸ் பண்டிகையன்று நியூயார்க்கில் தெருத் தெருவாகச் சென்று வழிப்போக்கர்களுக்கு 1, 2, 5, டாலர் நோட்டுகளை தானம் கொடுத்தாராம். சனிக்கிழமையன்று அப்படி அவர் கொடுத்த தொகை 10,000 டாலர்கள். அவர் 20 வருடமாக ஒவ்வொரு கிறிஸ்துமஸ் நாளன்றும் இம் மாதிரி செய்து வந்துள்ளார். 1946-ல் முதல் தடவையாக இவ்வாறு வாரி வீசியபோது, அதிகாரிகள் அவரைப் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்று நினைத்தார்கள். ஒரு மனநோய் வைத்தியரிடம் அனுப்பினார்கள். அவர் முற்றிலும் நல்ல மனத்தெளிவுடன் இருப்பதாக டாக்டர் சொன்னதின் பேரில், அவரை விடுதலை செய்தனர். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டால், "பங்கு மார்க்கெட்டில் வந்த லாபம். பலரும் சேர்ந்து அனுபவிக்கட்டுமே?" என்று அவர் கூறுகிறார். அவரைப் பிடித்திருப்பது கொடைப்பித்து.

திரு. ஜோசப் போனவிட்டாவின் தரும சிந்தனை இன்றைய அமெரிக்கரால் புரிந்துகொள்ள இயலாதது. யு. எஸ். மக்களின் மனிதாபிமானம் வரம்பற்றது. உலகெங்கும் துயரைத் துடைப்பதற்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். ஆனால், கட்டுப்பாடுடன், பயனுள்ள வகையில் உழைக்கின்ற ஸ்தாபனங்களுக்குத்தான் தமது நன்கொடைகள் போக வேண்டும் என்று அவர்கள் நம்புகின்றனர். அதற்கான வாய்ப்பு அங்கு நிறைய இருக்கிறது. தனி நபர்களுக்குத் தரும் "தானம்" உருப்படியாக எந்தப் பணிக்கும் பயன்படாமற் போகலாம் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆகையால் ஒவ்வொரு ஊரிலும் சமுதாய தரும நிதியை ஏற்படுத்தி, அதன் மூலம் நன்கொடைகளை வசூலித்து தேவையுள்ளாருக்குத் தருகின்ற நடைமுறை அங்கு பழக்கமாகிவிட்டது.

திரு. போனவிட்டாவையும் மிஞ்சியவர்கள் எவ்வளவோ பேர் உண்டு. நம் நாட்டையும் பண்பாட்டையும் தமதாக்கிக்கொண்ட டாக்டர் அன்னி பெஸண்ட் ஒவ்வொரு வருஷம் கடைசி நாள் அன்று தமது பாங்குக் கணக்குகளிலும் பெட்டிகளிலும் உள்ள அத்தனைப் பணத்தையும், ஒரு பைசா பாக்கியில்லாமல், தானமாகக் கொடுத்து வந்தார். அவர் ஸ்தாபனங்களுக்கும் கொடுத்

49ஆம் பக்கம் பார்க்க

## திருமதி இந்திரா காந்தி வாழ்க்கை வரலாறு

திருமதி இந்திரா காந்தி 1917 நவம்பர் 19உ பிறந்தார். இப்போது அவருக்கு வயது 49 ஆகிறது. காலஞ்சென்ற பிரதம மந்திரி திரு. ஜவாஹர்லாலின் ஒரே பெண் திருமதி இந்திரா.

இந்திராவின் குழந்தைப்பருவம் பூராவும் பெரும் அரசியல் சூழ்நிலையிலேயே கழிந்தது.

1942-ல் திரு. பிரோஸ் காந்தி என்ற பார்ஸி இளைஞரை திருமதி இந்திரா மணந்தார். அவர்களுக்கு ராஜீவ், சஞ்சை என்ற இரு புதல்வர்கள் பிறந்தனர். கொஞ்சகாலம் திரு. பிரோஸ் காந்தியும், திருமதி இந்திராவும் அலகாபாத்திலுள்ள நேருவின் குடும்ப மாளிகையாகிய 'ஆனந்த பவனத்'திலேயே வசித்தனர். ஆனால், இந்தியா சுதந்திரம் பெற்று திரு.நேரு பிரதம மந்திரியான பிறகு இவர்களும் டில்லிக்கு வந்து விட்டனர். 1947-ல் இந்தியா பாகிஸ்தான் பிரிவினையைத் தொடர்ந்து டில்லியில் கலகங்கள் நடந்தன வல்லவா? காந்திஜியின் கட்டளைக்கிணங்க திருமதி இந்திரா அந்தப் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

சென்ற 17 வருடங்களாக திருமதி இந்திரா டில்லியில் தனது தகப்பனாரின் இல்லத்திலேயே இருந்தார்.

1962-ல் சீனப் படையெடுப்பு ஏற்பட்ட போது திருமதி இந்திரா போர் முனைக்குச் சென்று நமது ஜவான்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்கிறார்கள் என்று பார்வையிட்டார். அவர்களுக்குப் பல்வேறு வசதிகள் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்தார்.

1964-ல் திரு. நேரு காலமான பிறகு திரு. லால்பகதூர் பிரதமரானபோது, இந்திரா காந்தி செய்தி ஒலி பரப்பு இலாகா மந்திரியானார்.

திருமதி. இந்திரா ஸ்விட்ஜர்லாந்திலும், பின்னர் ஆக்ஸ்போர்டிலும், கடைசியாக கல்கத்தாவில் தாகூரின் சாந்திநிகேதனத்திலும் கல்வி பயின்றவர்.

1959-60-ல் திருமதி இந்திரா காந்தி காங்கிரஸ் அக்ராசனராகப் பணியாற்றியிருக்கிறார். தனது தகப்பனாருடன் திருமதி இந்திரா உலகம் பூராவிலும் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்.

மத்திய சமூக நல போர்டு, அகில இந்திய கைவினைத் தொழில்கள், போர்டுகளிலும் திருமதி இந்திராவுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

---

48ஆம் பக்கத் தொடர்ச்சி

தார். தனி நபர்களுக்கும் உதவினார். புது வருஷச் செலவு அனைத்தையும் புதிதாகச் சம்பாதிக்க வேண்டும் என்பது அவரது வாழ்க்கை வழி. இறைக்க இறைக்கத்தான் ஊற்றுச் சுரக்கும் என்ற நியதியில் நம்பிக்கையுள்ள மரபைச் சேர்ந்தவர்கள் பெஸண்டும், போனவீட்டாவும். அந்தத் தரும உணர்வு பின்தங்கிய நாடுகளில் இன்னும் நெடுநாளைக்குத் தேவையாயிருக்கும்.

# பாடலி புத்ரம்

திரு. மு. ஸ்ரீனிவாசன்

மாலை வெயில் கங்கைப் ப்ரவாகத்தைப் பொன்னிற மாகச் செய்து கொண்டிருந்தது. மகேந்திர காட்சி படகுத் துறையில் சோன்பூர் செல்லும் நீராவிப் படகு ஒன்று புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை விரிந்து கிடந்த கங்கையின் அழகையும், கம்பீரத்தையும் ரசித்துக் கொண்டிருந்த எனக்கு மெள்ள மெள்ள துறையும், படகும் என்றோ 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் அதே படகுத் துறையில் நேர்ந்த நிகழ்ச்சிக்கு என் உள்ளத்தை இட்டுச் சென்றது. மாமன்னன் அசோகன் கரையில் நின்றுகொண்டு துயரமும், பெருமையும் ஒருங்கே முகத்தில் பொங்க தன் மக்கள் மகேந்திரன் சங்கமித்திரை இருவரையும் இலங்கைக்கு அனுப்பிவைத்த நிகழ்ச்சி என் மனக் கண்ணில் தோன்றியது. அதே நிலையில் அவனது தலைநகரமான பாடலி புத்ரத்தைப் பற்றிய சுவையான சிந்தனைகளும் எழுந்தன.

பாடலி புத்ரத்தைப் பற்றி நினைக்கும் போது, பாரதத்தின் பழம் பெருமைகளெல்லாம் கண் முன்னே வருகின்றது. இரண்டாயிரத்து, ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே உலகை யெல்லாம் கவர்ந்த பழம் பெரும் நகரமல்லவா அது!

## பெயருக்குக் காரணம்

பாடலி புத்ரம் என்ற பெயர் வந்தது பற்றியே பல கதைகள் உலவுகின்றன. பரிஷ்டபர்வன் என்ற 12-ம் நூற்றாண்டு ஜைன நூலின்படி ஜைனத் துறவி ஒருவர் ஒரு கொடுங்கோல் மன்னனால் அநியாயமாகக் கழுவில் ஏற்றப்பட்டாராம். அவரது மண்டை ஓட்டில் ஒரு பாடலி விதை விழுந்து முளைத்தது. கி. மு. 460-ல் அஜாத சத்ருவின் மைந்தன் உதாயி ஒரு புதுத் தலைநகருக்கான இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு தன் சோதிடர்களை அனுப்பினானாம். அவர்கள் இங்கு வந்தபோது, அம்மரக் கிளையில் ஒரு சாஷப் பறவை அமர்ந்து, தன் அலகைத் திறந்து மூடிக் கொண்டிருந்ததையும், அந்தத் திறந்த வாயினுள் தானாகவே பற்பல பூச்சிகளும் வந்து விழுவதையும் கண்டனராம். இப்படியே தங்களுடைய அரசனுடைய பகைவர்களும் தாங்களாகவே அவனது வசமாவார்கள் என்ற நினைப்பில் அவர்கள் அந்தப் பாடலி மரம் இருந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தனராம். எனவே, பாடலிபுத்ரம் என்ற பெயர் வந்ததாம்.

கதாஸரித் ஸாகரம் என்ற

புகழ்பெற்ற, வடமொழிக் கதைக் கொத்தின்படி புத்ரகன், அவனது மனைவி பாடலி என்பவளது பெயரால் பாடலிபுத்ரத்தை அமைத்தானும்.

பழம் நூல்களில் காணப்படும் மற்றொரு சுவையான கதையின் படி, உல்லாசப் பயணம் வந்த மாணவர்களில் ஒருவன் வேடிக்கையாக ஒரு பாடலி மரத்தை மணந்ததாகவும், இரவில் அம்மரமே கன்னி உருக்கொண்டு, அவனோடு தனித்திருந்ததாகவும், அப்பாடலியின் புத்ரன் பின்னுளில் இந்நகரை அமைத்ததாகவும் தெரிகிறது.

ஆனால்இவைகளெல்லாம் கதையே தவிர, சரித்திர அடிப்படை கொண்டவை அல்ல. வரலாற்றின் படி ராஜக்ருஹத்தைத் தலைநகராகக் கொண்டு மகதத்தை ஆண்டு வந்த பிம்பிசாரனின் மைந்தன் அஜாத சத்ருவின் காலத்தில் ராணுவத் தேவையை முன்னிட்டு ஒரு சிறு கோட்டை எழுந்தது. பாடலி புத்ரத்தில் மலைகள் சூழ்ந்த ராஜகிருஹம் போக்கு வரத்து வசதிக்கும், படையெடுப்புக்கும் ஏற்றதாக இல்லை. எனவே, கங்கை நதியும், சோன் நதியும் கலக்குமிடத்தில் ஒரு சிறு கோட்டையை எழுப்பினுன் அஜாத சத்துரு. அவனது மகனுன உதாயி தன் தலைநகரையே மாற்ற விரும்பினுன். செக்கச் சிவந்த பாடலி மலர்கள் நிறைந்து, வனப்புடன் திகழ்ந்து, கங்கைக் கரையில் தவழும் பாடலி கிராமம் அவனது உள்ளத்தைக் கவர்ந்தது. இப்படியாகப் பாடலி புத்ரம் உருவாயிற்று.

பாடலி புத்ரம் உருவாகி வருகையில் புத்த பகவானே அதைப் பார்வையிட்டு, ஆரிய மக்களின் பெரும் வணிகத் தலமாக இது விளங்குமென்றும், பின்னுல் தீயினுலும், உட்பகையினுலும் இந்நகர் அழியுமென்றும் கூறியதாகத் தெரிகிறது. புத்தர் வாக்குப்படி தீயினுலேயே இந்நகர் அழிவுற்றது. அன்று புத்தர் கங்கையைக் கடந்து சென்ற துறையை கௌதம கட்டம் என்று ஏழாம் நூற்ருண்டு வரை பேசியதாக ஹியான் சாங் எழுதுகிருர்.

சந்திரகுப்த மௌரியனின் ஆட்சியில் காபூல் முதல் தமிழகம் வரை பரந்த ஒரு சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக விளங்கியது பாடலி புத்ரம். 'அர்த்த சாஸ்திரம்' என்று அரசியலுக்கு விளக்கவுரை எழுதிய சாணக்கியன், சந்திரகுப்தனுக்குக் குருவாக விளங்கினுன்.

பாடலி புத்ரத்தின் சிறப்பையும் அங்கு நடந்த நல்லாட்சியையும் பற்றி கிரேக்க தூதர் மெகஸ்தனீஸ் எழுதிய நூலும், அர்த்த சாஸ்திரமும் பின்னுளில் பாடலி புத்ரத்துக்கு விஜயம் செய்த சீனயாத்ரிகர்களின் குறிப்புகளும் பேசுகின்றன.

## கிரேக்க தூதர் வர்ணனை

பாடலி புத்ரத்தைப்பற்றி மெகஸ்தனீஸ் கூறுவதாவது :—" கங்

கையும் எரனேபோவாஸ் (ஹிரண்ய வாஹினி அல்லது ஸோன்) நதியும் கூடுமிடத்தில் அமைந்தது பாலிபோத்ரா. எண்பது ஸ்டேடியா (9·2 மைல்)நீளமும் பதினைந்து ஸ்டேடியா (1·7 மைல்) அகலமும் கொண்டது இந்நகரம். இந்நகரைச் சுற்றி நெடுகிலும்மரத்தாலானமதில் சுவர் உள்ளது. அவற்றில் இடையிடையே அம்புகள் உண்டு. அரணை பாதுகாக்கவும் நகரின் கழிநீருக்காகவும் கோட்டையைச் சுற்றி ஒரு பேரகழி இருக்கிறது. அறுநூறு அடி அகலமும் மிகுந்த ஆழமும் கொண்டது இது. இச்சுவரில் 570 கோபுரங்களும் 64 வாயிற் கதவுகளும் உள்ளன."

பிளினி என்ற வரலாற்று ஆசிரியரின் கூற்றுப்படி சந்திரகுப்தனின் பெரும் படையில், ஆறு லட்சம் காலாட்படைகளும் முப்பதாயிரம் குதிரைப் படையினரும் ஒன்பதாயிரம் யானைகளும் ஏராளமான தேர்களும் இருந்தன.

இப்படிப் படை பலத்தால் பாரதத்தை யெல்லாம் வென்றிருந்த போதிலும் சந்திரகுப்தனின் ஆட்சிசிறந்த ஜனநாயகத்தின் அம்சங்கள் பலவற்றைத் தன்னுள்ளே கொண்டிருந்தது. அர்த்த சாஸ்திரத்தின்படி "தனக்குப் பிடித்ததையே நல்லதென்று அரசன் கொள்ளக் கூடாது. ஆனால் தன் குடிமக்களுக்குப் பிடித்தமானதையே அவன் கொள்ளவேண்டும். எனவே மௌரியர் ஆட்சியில் மந்திரி சபையும் விசேஷ நியாயஸ்தலங்களும், கிராம சபைகளும் இருந்தன. தனது ராஜ்யத்தின் எல்லைப்புறப் பகுதிகளுக்கு நியாயத்திலும் நேர்மையிலும் நம்பிக்கை கொண்ட விசேஷ நீதிபதிகளை அவ்வப்போது அனுப்பி நாட்டைப் பரிபாலித்தான் மன்னன்.

இத்தகைய பெரும் மௌரிய வம்சத்தில் உலகமே இன்றுவரை கண்டிராத மாமன்னனாக வந்தான் அசோகன். வெற்றியோடு தன் ஆட்சியைத் துவக்கிய அவன், கலிங்கப் போருக்குப் பின், உயிர்க்கொலையைத் தானும் விட்டதோடன்றி தன் நாட்டிலேயே சட்டம் செய்து தடை செய்தான். புத்தரின் அன்பு வழியிலே நின்று நாற்பதாண்டுகள் ஆட்சி புரிந்த அசோகன், தன் கல் வெட்டுக்கள் ஒன்றில் "பேரி(கை) கோஷத்தைத்தான் தர்ம கோஷமாக மாற்றி விட்டதாகப்" பூரிப்படைகிறான்.

அசோகனின் ஆட்சிக் காலத்தில் பாடலி புத்ரத்தின் மதில்களெல்லாம் கற்சுவர்களாக்கப்பட்டன. இருந்தாலும் மரத்தாலான அரண்மனைகளும் பல இருந்தன. அசோகன் பாடலியில் பற்பல ஸ்தூபிகளைக் கட்டியதாகத் தெரிகிறது. ஹியான்சாங்கின் குறிப்பின்படி அசோகன் புத்தர் அஸ்தியின் மேல் ஐந்து பெரும்ஸ்தூபங்களை எழுப்பினானாம். தான்கண்ட மற்றொரு கல்வெட்டின்படி ஜம்பூத்வீபத்தையே மும்முறை அசோகன்பௌத்த சங்கத்துக்குக் கொடுத்து விட்டதாக ஹியான்சாங் மேலும் கூறுகிறார்.

பாடலி புத்ரத்தில் மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றம் இயங்கி வந்தது. நகரப் பொருளாதாரம், கைத்தொழில், வாணிபம், ஜனன மரணம், மராமத்து, பூங்கா முதலியவற்றை முப்பது பேர்கள் அடங்கிய ஆறு துணைக் குழுக்கள் நிர்வகித்தன.

பாடலி புத்ரம் பெரும் வியாபாரத் தலமாக விளங்கியது. தசகுமார சரிதத்தில் புஷ்பபுரி என்று அழைக்கப்பட்ட இந்நகரின் கடை வீதிகளில் கடலின் பெருமையைப் பறை சாற்றுவது போல் நல்முத்துக்களும் பவளங்களும் பரப்பப்பட்டிருந்ததாக வருணிக்கப்படுகிறது.

பாடலிபுத்ரத்திலிருந்துகாபூல் வரை ராஜ்பாத் என்ற ராஜ பாட்டை அல்லது அரசர் நெடுஞ் சாலை இருந்தது.

ஸ்ட்ரபோ என்பவரின் குறிப்புக்களின்படி மத்திய ஆசியாவிலுள்ள ஆக்ஸஸ் நதி இந்திய ஐரோப்பிய வாணிபத்தில் முக்கியமான சந்திப்புத்தலமாக விளங்கியது. மௌரிய அரண்மனைகளில் பெண்டிரும் யவன வீரர்களும் இருந்ததாகத் தெரிகிறது. அர்த்த சாஸ்திரத்தில் மன்னனது குதிரைகள் அரேபியாவிலிருந்து வந்ததாகப் பேசப்படுகிறது.

## வாணிபம்

கடல் கடந்து வாணிபம் நடந்ததுபோல், உள்நாட்டிலும் பெரும் நதிகளின் வழியில் வியாபாரம் நடந்தது. மத்திய இந்தியாவிலிருந்த ஸஹாஜதி, யமுனைக் கரையிலிருந்தகௌசாம்பி, காசி, சம்பா, பாடலி புத்ரம் முதலியன பெரும் நதித் துறை முகங்களாக விளங்கின.

மௌரியர் ஆட்சிக்குப் பின் சுங்கர், குப்தர் காலம் முடிய ஆயிரம் ஆண்டுகள் பாடலி புத்ரம் பெருமையோடு விளங்கியது. சந்திரகுப்தன், சமுத்ரகுப்தன், சந்திரகுப்த விக்ரமாதித்தன் போன்ற பெரும் குப்த மன்னர்களின் காலத்தில்-இடைக் காலத்தில் குன்றிய பெருமை மீண்டும் துலங்கத் தழைத்தது, பாடலி புத்ரம். இந்தியாவின் பொற் காலம் என்று புகழப்படும் குப்தரின் காலத்தில் இங்கு விஜயம் செய்த சீன யாத்ரீகர் பாஹியான் கி. பி. 399 முதல் 414 வரை இந்தியாவிலேயே தங்கி, பெஷாவர், காசி, பாடலிபுத்ரம் முதலிய பல தலங்களையும் கண்டு வந்தார். பாடலி புத்ரத்திலேயே மூன்று ஆண்டுகள் தங்கி, அவர் வடமொழி பயின்றார். பாடலி புத்ரத்தின் பௌத்த மடங்கள் பெரும் கல்விக்கூடங்களாக விளங்கின என்றும், மக்கள் கருணையும், எளிமையும் கொண்டு செல்வச் சிறப்போடு வாழ்ந்ததாகவும் அவர் கூறுகிறார். குப்த ஆட்சி குறைந்த வரிகளோடு, நிறைந்த ஆட்சியென்றும், ஸர்வ மத சுதந்திரம் நிறைந்ததென்றும் அவர் குறிப்பிடுகிறார்.

## பௌத்த மகா சபை

பாடலி புத்ரத்தில் அசோகனது மேற்பார்வையில் மூன்றாவது பௌத்த மகா சபை கூடியது. பௌத்த சாஸ்திரங்களைத்

தொகுத்துச் சீர்படுத்திய இச் சபை இப்படியே ஜைன மகா சபை ஒன்றும் பாடலியில் கூடிய தாகவும், ஜைன மதத்தின் பன்னிரு சங்கங்கள் அப்போது இயற்றப்பட்டன என்றும் தெரிய வருகிறது.

1912-14-ம் ஆண்டுகளில்இன்றைய பாட்னா ஜங்ஷனுக்கும், நகருக்கும் நடுவே மோஹர் என்ற கிராமத்து அருகில் புதை பொருள் ஆராய்ச்சி நடைபெற்றது. அப்போது சில பழைய கட்டிடங்களும் நாணயங்கள், மண்பாண்டங்கள் முதலியனவும் கிடைத்தன. அவற்றுள் முக்கியமானது அசோகனது பல கால் மண்டபம். தமிழ் நாட்டு நூற்றுக்கால் மண்டபம் போல் எண்பது ஒற்றைக்கால் தூண்கள் கொண்ட அழகான மண்டபம் இது. இத்தூணில் ஒன்றுமட்டும் நல்ல நீளத்தோடு கிடைத்தது. எஞ்சியுள்ள தூண்களின் அடிப்பாகம் மட்டுமே காணக் கிடைக்கின்றன. மற்றைய அசோக ஸ்தம்பங்களைப் போல், இவையும் ஒற்றைக் கல்லில் மிகு நேர்த்தியாக, வழுவழுப்பாக விளங்குகிறது. பிரம்மாண்டமான இத்தூண்களின் சுற்றளவு அடியில் 7·91 அடி, உயரம் 32½ அடி.

இந்த மண்டபத்தைத் தோண்டு கையில், கிடைத்த ஆதாரங்களால், அக்காலத்துக் கட்டட வேலையும் தெளிவாகத் தெரிகிறது. அரை அடி கனத்துக்கு சிமின்ட் போன்ற ஒரு நீலக் களிமண்ணைப் பரப்பி, அதன் மேல் நாலரை அடி சதுர அளவில் மரக் கட்டையைப் பொருத்தி, அவற்றின் மேல் இந்த 32½ அடித் தூணைப் பொருத்தி, ஒன்பதடி ஆழத்துக்கு மண்ணால் மூடியிருக்கிறார்கள்.

இந்தப் புதைபொருள்ஆராய்ச்சியை நடத்திய டாக்டர் ஸ்பூனர் தனது அறிக்கையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நாட்டப்பட்ட அப்பலகைகள் இன்றுவரை புதுமையோடும், வலிவோடும், விளங்குவதைப் புகழ்ந்து, அசோகனின் பலகால் மண்டபம் கட்டப்பட்ட முறையும், அமைப்பும் இன்றுகூட வெல்ல முடியாதவை என்றும் பாராட்டுகிறார்.

இவை தவிர சற்றே எரிக்கப்பட்ட ஒரு பெரிய மரத்தூணும், நாணயங்கள், களிமண் பொருள்கள் முதலியனவும் கிடைத்துள்ளன. மேலும் பாட்னாவின் பல பகுதிகளிலும் மௌரிய விடுதிகளில் இருந்த மரத் தூண்கள், பலகைகள் முதலியனவும், சில இடங்களில் நதிக்கு அருகே ஆழத்தில் படிகளும், வேறிடங்களில் வெகு ஆழத்தில் சாக்கடைக் கால்களும் காணப்பட்டன.

விக்கிரமாதித்தன் சிம்மாசனம் இருந்த இடத்தின் பெருமையைப் போல், பாடலிபுத்ரத்தின் பெருமையைத் தெரிந்து கொண்டவன் போல், பின்னாளில் ஷேர்ஷா புதிய பாட்னாவை நிர்மாணித்தான். இங்குதான் சீக்கியர்களின் பத்தாவது குருவான

56-ஆம் பக்கம் பார்க்க

# வாழை தரும் பேழை

அ. எத்திராசன்.

வாழைக்காய் 'பச்சி' என்றாலே நம் நாவில் நீர் ஊறுகிறது; இங்ஙனம் வயிற்றுக்கு உணவாகும் வாழை நம்கருத்திற்கும் 'விருந்து' அளிக்கிறது; அந்த விருந்து நம் வாழ்க்கைக்கே நடைபாதை அமைத்து, அழகு செய்கிறது.

ஆம்! வாழைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள உறவு ஏராளம்! ஏராளம்!! ஆழ்ந்து அகன்ற அமைதியான நீர்-நிலையில் ஒரு சிறு கல்லை எறிவோமானால் எண்ணற்ற சிற்றலைகள் அடுக்கடுக்காக எழுவதைப் பார்க்கின்றோம். அவ்வண்ணமே வாழையைக் கற்க, கற்க நமது மனத்தில் அறிவலைகள் எழுகின்றன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

"பிரிட்டினில் வாழையடி வாழையாக மன்னர்கள் அந்நாட்டை ஆண்டு வருகின்றனர்" இப்படி வரலாற்றாசிரியர்கள் கூறுவர். வாழையின் அடிப்பாகத்தினின்று கன்றுகள் கிளர்ந்தெழுகின்றன. அவைகள் வளர்ந்த பின், ஒவ்வொன்றினின்றும் பல கன்றுகள் மீண்டும் தோன்றிய வண்ணம் தனது இனத்தை அழிய விடாது செய்கின்றன. இது இயற்கை இயற்றும் ஓர் கண்காட்சி. அதுபோல பிரிட்டனைப் பரம்பரை பரம்பரையாக அரச குடும்பத்தினர் ஆண்டு வருகின்றனர் என்பதே அதன் உட்பொருள்.

இவ்வாறு தொடர்ச்சியான இனவளர்ச்சி கொண்டது வாழை.

வாழையை மணப்பந்தலின் முகப்பில் அமைத்துப் பந்தலை அழகு செய்வது நம் வழக்கு. இதன் பொருள் என்ன? இப்புது மணத் தம்பதிகள் செய்யப்புகும் புதுக் குடும்பம் 'வாழையடி வாழையாக' தழைத்தோங்க வேண்டும் என்பதுதானே!

ஒரு வாழை ஒரே ஒரு முறைதான் 'குலை' யிடும்; இதுதான் இயற்கை. அங்ஙனமே, 'ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒரே ஒரு முறைதான் திருமணம் நிகழ வேண்டும்' என்னும் சீரிய கோட்பாட்டைக் கொண்டு திகழ்கிறது நந்தம் தமிழினம். ஒரு 'வாழை' யினின்று பல கன்றுகள் தோன்றி, ஒன்று பலவாகப் பெருகுகின்றன. அவ்வாறேயாழினும் இனிய 'மழலைச் செல்வங்கள் பல பெற்று, இன்பக் கேணியில் நீந்த வேண்டும் என்பதன்றோ வாழையை மணப்பந்தலில் பிணைப்பதின் நோக்கு! நம் வாழ்வின் ஒவ்வோர் இன்பதுன்ப நிகழ்ச்சிகளிலும்

பங்கெடுப்பது 'வாழைப்பழம்' என்பது நினைவு கூரத்தக்கது.

'வாழை' நுனியிலிருந்து அடி வரை பயனளிக்கும் பாகங்களையே தன்னகத்தே கொண்டுள்ளது; [ஏனெனில், நாம் இழிவாகக் கருதும் வாழை மட்டையோ, மங்கையரின் பூங்குழலில் திகழும் 'பூச்சரம்' தொடுக்க இன்றியமையாததாகிறது.] இது மானிடர் ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற மட்டும் பிறருக்கு உதவிபுரிய வேண்டும் என்னும் நல் அறத்தை ஒவ்வொருவர் மனத்திலும் 'பசுமரத்தாணி போல்' பதியவைக்கும் 'திருக்குறளின்' திருவுருவம் அன்றோ! 'வாழை' என்று அழகாகக் கூறும் போதுவந்தோரை "வாருங்கள்" என்று மனங்குளிர குழைந்து வரவேற்பது போன்ற உணர்ச்சியை நாம் பெறுகின்றோம்; இவ்வாறு இதன் சொல்லிலும் தமிழ்ப் பண்புமிளிர்வதை எண்ணி, எண்ணி மகிழலாம்.

## இறுதியாக :

தமிழ் எழுத்துக்களை மூன்று இனமாகப் பிரிக்கலாம். அவை யாவன :

வல்லினம்,

இடையினம்,

மெல்லினம்,

"வாழை" என்ற பதத்தில் வரும் 'வ்'வும் 'ழ்'வும் இடையினத்தையே சார்ந்தனவாம்; அதாவது இப்பதத்தில் 'வல்லினமோ', மெல்லினமோ' கலக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. இவ்வரிய பண்பு இவ்வுலகில் தனித்தன்மைகளைத் தன்னகத்தே கொண்ட பல்வேறு இனங்கள் தனித்தனியே வாழும், வாழ வேண்டும் என்பதைக் குறிக்கவில்லையா? இதுவே இயற்கை.

இவ்வாறு தமிழர் தம் இனவாழ்வும் வாழையும் ஒன்றுபட்டதைக் கண்ணுறுகின்றோம். மரங்களிலே எண்ணற்ற இனங்களுண்டு அவைகளிலே வாழையும் ஓர் இனம். பாவேந்தர் பாரதிதாசன் "மலைவாழை அல்லவோ கல்வி" என்று கண்ணனை கல்விக்கு வாழை'யை உவமானமாகக் கூறியுள்ளார்.

**காஞ்சி பச்சையப்பன் கல்லூரி இதழ்**

---

54ஆம் பக்கத் தொடர்ச்சி

கோவிந்த சிம்மன் 1660இல் அவதரித்தார். ராஜா ரஞ்சித்சிங் என்பவரால் கட்டப்பட்டதான 'ஹரி மந்திரி' என்ற சீக்கியர் ஆலயத்தில் குருகோவிந்த சிங்கின் 'கிரந்த ஸாஹிப்' நூலும், அவரது பாதுகையும், தொட்டிலும் உள்ளன. இது சீக்கியர்களுக்கு மிக முக்கியமான தலம்.

இன்றும் பாடலி புத்ரத்தின் பெருமையில், ஓரளவோடு, பீஹாரின் தலைநகரமாக விளங்கி வருகிறது பாட்னா.

—" **தினமணி சுடர்**

# வாழ்க்கையில் வெற்றி

[ந. திராவிடமணி.]

நாம் ஏன் இவ்வுலகில் பிறந்தோம்? இது ஒரு பெரிய புதிர் தான். இனிப் பிறக்கப் போவதில்லை. இறக்கப் போவது திண்ணம். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட பாகமே வாழ்க்கை. நாம் அவ் வாழ்க்கைப் போரில் வெற்றியடைய வேண்டாமா? குடத்தில் இட்ட விளக்குப் போலச் சிறிது நேரம் மினுமினுக்கிப் பின்பு அணைந்து விடவா பிறந்தோம்? மண்ணுக்குப் பாரமாகவும், விண்ணுக்கு வேதனையாகவும், சோற்றுக்குக் கேடாகவும் இருந்து காலத்தை வீணே கழிப்பதற்காகவா பிறந்தோம்? ஓரறிவு முதல் ஐந்தறிவு உயிரினங்களைப் போல வாழ்க்கையைக் கழிப்பதற்காகவா பிறந்தோம். இல்லை, இல்லை. வாழ்க்கையில் ஓர் உன்னத இலட்சியத்தைச் சாதிப்பதற்காகவே நாம் எல்லோரும் படைக்கப்பட்டோம். இறைவன் அமைப்பில் அனைவரும் சமம்தான். இறைவன் அனைவரையும் ஒரே மாதிரியான கண் கொண்டு தான் நோக்குகின்றான். அப்படியிருக்க, வாழ்க்கைப் போரில் சிலர் வாகை சூடுவதற்கும், பலர் தோல்வி யடைவதற்கும் காரணம் என்ன? சிந்தித்துப் பார்க்கும்போது உயர்வடைவதும், தாழ்வடைவதும் அவரவரது உள்ளப் பண்பாட்டைப் பொறுத்துதான் உள்ளது. மனம்தான் எல்லாவற்றையும் அளிக்கும் அமுத சுரபி. தன்னம்பிக்கை, அச்சமின்மை, விடா முயற்சி முதலியவற்றை யளித்து வாழ்க்கைப் போரில் வெற்றியடையச் செய்வதும் மனம்தான். அழுக்காறு, அவா, வெகுளி, கயமை முதலியவற்றை அளித்துத் தோல்வியடையச் செய்வதும் அதே மனம்தான். இதனின்று மனத்தை நல்வழிப் படுத்துவதின் மூலம்தான் வாழ்க்கையின் இரகசியம் முழுவதும் அடங்கியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

வெற்றி பெறவிரும்பும் ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கை மிகவும் அவசியம். தன்னம்பிக்கையுடையவர்கள்தான் வாழ்க்கையில் வெற்றியடைகிறார்கள். தன்னம்பிக்கை யற்றவர்கள் வெற்றியடைந்ததை உலகம் இதுவரை கண்டதும் இல்லை. இனிக் காணப்போவதும் இல்லை.

"தன்னம்பிக்கை யில்லாதவனின்
வாழ்க்கை, காலால் நடப்பதற்குப் பதிலாக
தலையால் நடப்பதை யொக்கும்"

என்று கூறுகிறார் ஞானி எமர்சன். ஒவ்வொருவருடைய எண்ணத்திலும், செயலிலும் தன்னம்பிக்கைச் சுடர்விட்டு எரிய வேண்டும். அவ்விதமாயின் அவனை எதிர்க்க எவ்விதச் சக்தியாலும் முடியாது. ஆங்கில அரியேற்றின் பிடரி மயிரைப் பிடித்தாட்டி நமக்கு விடுதலையை வாங்கித்தந்தது காந்தியடிகளின் உள்ளத்தில் சுடர்விட்ட 'தன்னம்பிக்கை'தான்.

ஆகவே உலக வரலாறு என்பது தன்னம்பிக்கை கொண்ட சிலருடைய வரலாறுதான். அத்தன்னம்பிக்கை, மனிதனிடத்துள்ள இறையுணர்ச்சியை தெய்வீகச் சக்தியைத் தூண்டுகிறது. மனிதர்களுக்குள்ளே யுள்ள வேறுபாட்டை யுண்டு பண்ணுவது அவரவர்கட்கு இருக்கும் தன்னம்பிக்கையின் பாகுபாடேயாகும்.

மனிதனை அணி செய்யும் குணங்களுள் தலைமையானது அச்சமின்மை. அச்சமுள்ள தேகமோ அல்லது மனிதனோ வெற்றியடைந்ததாக எந்தச் சரித்திரமும் எடுத்துச் சொல்லவில்லை. உச்சிமீது வானிடிந்து வீழ்கின்றபோதும் நமக்கு அச்சம் என்பது இருக்கக் கூடாது. அச்சமுள்ளவர்கள் அச்சமின்மையை அதாவது தைரியத்தை வரவழைத்துக் கொள்ளலாம்.

சான்றாக காந்தியடிகள் இளம் வயதில் மிகவும் கோழை. இரவில் படுத்துறங்கும்போதெல்லாம் பாம்பு, தேள் வந்துவிடுமோ, பூதங்கள், பேய்கள் நெருங்கி விடுமோ என்று நடுநடுங்கிக் கொண்டிருப்பாராம். மனிதர்களைப் பார்ப்பதற்கும் பயம். பார்த்துப் பேசுவதற்கும் பயம். ஆனால் பின்னர், சர்வ வல்லமை பெற்ற ஆங்கில அரசை எதிர்த்து நின்றார். வற்றிய உடலுடனும், அரை நிர்வாண உடையுடனும் காட்சியளித்த அவர், மிருக பலத்துடன் சர்வாதிகாரம் நடாத்திய வெள்ளையர்களை இந்திய உபகண்டத்தில் இருந்தே வெளியேற்றினார்.

"நோயால் பீடிக்கப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கையைவிட அச்சத்தால் பீடிக்கப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கையே ஏராளம். ஆகவேதான் நான் கூறுகிறேன். யாரும் எதற்கும் அஞ்சாதீர்கள். விவேகம் நிறைந்த வீரர்களாக விளங்குங்கள்"

என்பது அவர் தெய்விக வாக்கன்றோ!

ஆகவே இவ்வுலகமாகிய கடலில் நீந்தத் தெரியாதவர்கள் அலைகளுக்கு இரையாக வேண்டியதுதான். மாறாக எதிர்த்து வரும் அலைகளைத் தம் கைகளால் அடக்கியும், ஒடுக்கியும் நீந்தக் கூடியவர்களை அவ்வலைகளே தாங்கிச் செல்கிறது.

வெற்றிக்கு விடாமுயற்சியும் தேவை.
முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்திவிடும்.
ஊழையும் உப்பக்கம் காண்
பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சியின்மை வறுமையைப் புகுத்திவிடும் என்றும், தெய்வத்தால் இடுக்கண் வரினும் முயற்சிவிடற்பாலன்று என்றும் வாழ்வியல் மேதை வள்ளுவர் கூறுகிருர்.

சர்ச்சிலின் சிறப்புக்குக் காரணம் அவருடைய விடா முயற்சியே யாம். பள்ளியில் ஒழுங்காக கல்வி கற்காத சர்ச்சில் இந்தியாவின் சிப்பாயாக இருந்த போது பெரியார்களின் வரலாறுகள், உலக சரித்திரம், பொருளாதாரம் முதலிய பல கலைகளைக் கற்ருர். அவர் தம் நாவன்மையை அபிவிருத்தி செய்வதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சமில்லை. அவர் ஒவ்வொரு நாளும் கப்பலின் மேல் தளத்திற்குச் சென்று பரந்து கிடந்த கடல் அலைகளைப் பார்த்துச் சொற்பொழிவு ஆற்றுவார். இதுவே இன்று அவர் சிறந்த ஆங்கிலப் பேச்சாளர்களில் ஒருவராக ஆகச் செய்தது.

ஆகவே உயர்வு தாழ்வுக்கும், இன்ப துன்பங்களுக்கும் காரண கர்த்தா மனிதன். அவை வெளியில் இருந்து திணிக்கப்படுவது இல்லை. அவை உண்டாகும் இடம் மனிதனின் மனம்தான். மனத்தின் உள்ளே உண்டாகும் நல்ல தீய எண்ணங்களை நம்மால் பார்க்க இயலாது. எண்ணங்களின் பிரதிபலிப்பான செயல்களையே நாம் உணருகின்ருேம். நம் மனத்தில் பதிந்து கிடக்கும் இயல்புகளே நம் ஒழுக்கங்களைத் தீர்மானிக்கின்றன. ஒழுக்கங்களின் பிரதிபலிப்பே இன்ப துன்பங்கள். ஆகவே ஒருவன் தன் மனத்தைப் பக்குவப்படுத்தி அதனின்றும் எழும் எண்ணங்களை ஒழுங்குபடுத்துவதிலேதான் வாழ்க்கையின் வெற்றி யமைந்துள்ளது.

வெற்றி எண்ணத்தைப்
பொறுத்துதான் உள்ளது.
வெள்ளத்தனையது மலர் நீட்
டம் மாந்தர் தம்.
உள்ளத்தனையது உயர்வு.

—காஞ்சி பச்சையப்பன்
சுல்லூரி இதழ்

---

62ஆம் பக்கத் தொடர்ச்சி

கள் குறித்து முக்கிய தகவல்கள் பெறப்பட்டன.

'மீட்டியார்' கப்பலின் முக்கிய அம்சம், அத்துடன் இணைந்த ஹெலிகாப்டர் விமானம், 100க்கு அதிகமான முறை பறந்து இந்த "ஹெலிகாப்டர்" விமானம் முக்கிய ஆராய்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டது. 2,610 டன் எடையுள்ள ஆராய்ச்சிக் கப்பலின் ஒவ்வொரு சாதனமும் சிறந்த முறையில் வேலை செய்கின்றன. அட்லாண்டிக் கடல் ஆராய்ச்சியிலும் இதைப் போன்ற முழுவெற்றி கிடைக்குமென மேற்கு ஜெர்மன் விஞ்ஞானிகள் நம்புகிருர்கள்.

(யூ. பி. எஸ்)

# அங்கஹீனக் குழந்தைகள் எழுதப் படிக்க புதுமையான "டைப்ரைட்டர்"

## ஒளியினால் இயங்கும் "லைட்-ரைட்டர்" மேற்கு ஜெர்மனி சோதனை வெற்றி.

❊❊❊

(இடோ உல்ரிச்)

*அங்கக் குறைவான குழந்தைகள் இனி தனிமையில்கிடந்து தவிக்க வேண்டியதில்லை. மேற்கு ஜெர்மனிப் பள்ளி ஒன்று, கண்டுபிடித்துள்ள புதுமையான முறை மூலம், அங்கஹீனக் குழந்தைகள் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ள முடிகிறது. "டைப்ரைட்டர்" போல "லைட்ரைட்டர்" என்ற ஒளி எழுத்து முறையின் மூலம், இக்குழந்தைகள் எழுதப் படிக்க கற்றுக்கொள்கிறார்கள்.*

கோலான் (டாட்)-இதுவரை அங்கஹீனக் குழந்தைகள், மற்றவர்களுடன்"கலகலப்பாக"கலந்துரையாட முடியாமல் தனிமையில்கிடந்து தவிக்க வேண்டியிருந்தது. மேற்கு ஜெர்மனியிலுள்ள ஒரு விசேஷப் பள்ளி கண்டுபிடித்துள்ள "லைட் ரைட்டர்" என்ற ஒளி எழுத்துக் கருவியின் உதவியினால், இக்குழந்தைகள் எழுதப் படிக்க முடிகிறது.

கோலான் நகரின் அருகாமையில் அமைந்துள்ள அங்கக் குறைவு குழந்தைகளுக்கான பள்ளியில் சேர்ந்துள்ள சுமார் 100 சிறுவர்களும், சிறுமிகளும் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் பயின்று வருகிறார்கள். குழந்தைகளுக்கு கல்வி போதிப்பதுடன், தன்னம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்ச்சியையும் ஊட்ட முடிந்தது குறித்து இப்பள்ளி ஆசிரியர்கள் திருப்தி அடைந்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனியில் மட்டும் சுமார் 50,000 குழந்தைகள், ஏதேனும் ஒருவிதத்தில் அங்கஹீனத்துடன் உள்ளனர். மூளை சரிவர இயங்காததால் கை, கால் இயங்காமல் அல்லது பேச முடியாமல் இருக்கிறவர்கள் பலர். இது போன்ற குழந்தைகள் உலகில் இலட்சக் கணக்கில் இருக்கின்றன.

புதுமையான முறை என்ன? குழந்தையின் தலையில் "பாட்டரி விளக்குடன்" கூடிய தொப்பியை அணிவிக்கிறார்கள். எதிரே பெரிய பலகையில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களின் மீது டார்ச்சின் ஒளியை குழந்தை வீசுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு எழுத்தாகக் கற்றுக் கொண்டு, முழு வார்த்தைகளையும் கற்றுக் கொள்கிறது. இந்த முறையை மேலும் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய, டாக்டர்களும், தொழில் நுட்ப நிபுணர்களும், ஆசிரியர்

களுடன் சேர்ந்து கொண்டனர். பலகையில் பொறிக்கப்பட்ட ஒவ்வொரு எழுத்தின் மத்தியிலும் சிறிய "போட்டோ—ஷெல்" ஒன்று பொருத்தப்படுகிறது. குழந்தைகளின் ஒளிக்கற்றை பாய்ச்சப் பெற்றதும், 'போட்டோ – ஷெல்" அதை மின்சார சமிக்ஞைகளாக மாற்றி, ஒரு மின்சார "டைப்ரைட்டிங்" இயந்திரத்தை இயக்குகிறது. இந்த "ஒளி--தட்டெழுத்து" (லைட்ரைட்டர்) கருவியின் மூலம், கட்டுரைகள் எழுதவும், குழந்தைகள் விரைவாகக் கற்றுக் கொண்டார்கள். ஆசிரியர் செய்ய வேண்டியதெல்லாம், டைப்ரைட்டர் இயந்திரத்தில் காகிதத்தை மாட்டுவதுதான். சீக்கிரத்தில் இம்முறையிலும் சீர் திருத்தம் செய்யப்படும்.

அங்கஹீனக் குழந்தைகள் தாங்கள் "ஒளி -- டைப்ரைட்டர்" இயந்திரத்தின்மூலம் கல்வி கற்றுக் கொள்வதை மிகவும் விரும்புகிறார்கள். இதனைப் பயன்படுத்திக் கணித வடிவங்களை வரைவதின் மூலம், படங்கள் வரைய முடியாத ஏமாற்றத்தை ஓரளவு குறைத்துக் கொள்கிறார்கள்.

கோலான் நகரில் நடைபெற்ற இச்சோதனையின் வெற்றி எங்கும் பரவிவிட்டது. உலகின் பல பகுதிகளிலிருந்து இதுகுறித்து விவரமான தகவல்கள் கேட்டிருக்கிறார்கள். "லைட்-ரைட்டர்" இயந்திரத்தை மேலும் சீர்திருத்த, மேற்குஜெர்மனி அரசாங்கம் நிதிஉதவி அளித்துள்ளது. விரைவில் மலிவான விலையில் பெருமளவில் இந்த இயந்திரங்களைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதற்கிடையில் விலைஅதிகமான "மின்சார டைப்ரைட்டர்" இயந்திரத்திற்குப் பதிலாக, சாதாரண டைப்ரைட்டர் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியுமா என்பதும் சோதனை செய்து பார்க்கப் படுகிறது.

அங்கஹீனக் குழந்தைகள் ஒருநாள் தாங்களாகவே வீடுகளில் 'டைப்' அடிக்க அல்லது கணக்கு இயந்திரங்களை இயக்க வேண்டும் என்பதே, இப்பணியில் ஈடுபட்டுள்ள மேற்கு ஜெர்மனி டாக்டர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோரின் இலட்சியமாகும்.

(யூ. பி. எஸ்)

## 20,000 மைல் பயணம் செய்து, அட்லாண்டிக் கடலில் ஆராய்ச்சி

*இந்தியக் கடலில் ஆராய்ச்சிகள் நடத்திய ஜெர்மனிக் கப்பலின் புதிய திட்டம்.*

(மரியா லாங்)

இந்தியக் கடலில் ஆராய்ச்சிகளை நடத்திவிட்டு மேற்கு ஜெர்மனி ஆரய்ச்சிக் கப்பல் "மீட்டியார்" திரும்பியுள்ளது. கடலில் இருந்து சத்து உணவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் என்ன என்பதை இக்கப்பலின் விஞ்ஞா

ஞானிகள் முக்கியமாக ஆராய்ந்தனர். இக்கப்பல் மீண்டும் அட்லாண்டிக் கடலில் 19,500 மைல் பயணம் செய்து ஆராய்ச்சிகள் நடத்தப் போகிறது.

ஹம்பர்க் (டாட்) -- இந்தியப் பெருங்கடலில் வெற்றிகரமாக ஆராய்ச்சிகள் நடத்திவிட்டுத் திரும்பியுள்ள மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சிக் கப்பல் "மீட்டியார்", தற்போது மீண்டும் ஆராய்ச்சிப் பயணத்திற்கு தயாராகி வருகிறது. இம்முறை அட்லாண்டிக் கடலுக்குச் செல்கிறது. பூமத்தியரேகை அருகிலும், மத்திய அட்லாண்டிக் பகுதியிலும் இக் கப்பல் ஆராய்ச்சிகள் நடத்தும். இம்முறையில், சூரிய ஒளிக்கதிர் வீச்சின் தன்மை, பூமியின் மீது அதன் விளைவுகள் ஆகியவைகள் குறித்த ஆராய்ச்சியில் தனக்குரிய பங்கை இக்கப்பல் செய்கிறது.

கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்னர் ஹம்பர்க் துறைமுகத்திற்கு திரும்புமுன்னர், இக்கப்பல் அட்லாண்டிக் கடலில் 19, 500 மைல்கள் பயணம் செய்து, 5 மாதங்களுக்கு ஆராய்ச்சி நடத்தும். பத்து மேற்கு ஜெர்மனி பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 37 விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப நிபுணர்களும், பல்வேறுவித ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். குறிப்பாக, ரேடியோ கதிர்வீச்சு, வானவெளி மின்வீச்சு, மின்னல் ஆராய்ச்சி போன்றவைகளில் முக்கிய ஆராச்சிகள் நடத்தப்படும்.

இந்தியக்கடலின் ஆராய்ச்சியின் போது நடந்தது போலவே, கப்பல் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியில், தரையிலிருந்தும் விஞ்ஞானிகள் உதவி செய்வார்கள், பிரேஜிங் கடற்கரைக்கு அருகேயுள்ள ஒரு குட்டித் தீவில் இருந்து கொண்டு சில ஜெர்மன் விஞ்ஞானிகள், பூமி காந்த சக்தி, பனியின் தன்மை ஆகியவை குறித்து ஆராய்ச்சிகள் நடத்தி அவ்வப்போது தகவல் தெரிவிப்பார்கள். இத்துடன் பிரேஜில் விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சியில் கலந்து கொள்வார்கள்.

இந்தியக் கடலில் 7 மாத ஆராய்ச்சிகளின் முடிவுகள் இன்னும் முழுவதும் மதிப்பிடப்படவில்லையெனினும், ஆராய்ச்சி முழு வெற்றி என்றே சொல்ல வேண்டும். கடலிலிருந்து உணவு பெறுவதற்கான வாய்ப்புகள் என்ன என்பது குறித்து அப்போது ஆராய்ச்சிகள்மேற்கொள்ளப்பட்டன. இந்தியக்கடலில் 385 இடங்களில் பெருமளவில் மீன்கள் கூட்டம் கூட்டமாக வாழ்வது, இந்த ஆராய்ச்சிகளில் தெரியவந்தது. அத்துடன் 80 புதுவித மீன்வகைகள் இருப்பதும் தெரியவந்தது. "மீட்டியார்" கப்பலின் விஞ்ஞானிகள் ஏறத்தாழ 20, 000 இரசாயனப் பரிசோதனைகள் நடத்தினர். அத்துடன் பலூன்கள் பறக்கவிடப் பட்டும் சோதனைகள் நடத்தப்பட்டன. இதன்மூலம் பருவ மழை

59ஆம் பக்கம் பார்க்க

# ஊழியருக்குச் சம்பள உயர்வு

## ரூ. 5 முதல் ரூ. 12 வரை அதிகமாகக் கிடைக்கும்

## இதனால் சர்க்காருக்கு மேலும் ரூ. 25 கோடி செலவாகும்.

### மாதம் ஆயிரம் ரூபாய் வரை பெறும் 25 லட்சம்பேர் பயன் பெறுவர்

# 1965 டிசம்பர் 1உ முதல் அமல்

புது டில்லி, பிப். 5—மாதம் ஆயிரம் ரூபாய் வரையில் சம்பளம் வாங்கும் மத்ய சர்க்கார் ஊழியர்களின் கிராக்கிப்படி உயர்வு சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

1965 டிசம்பர் முதல் இந்தப் புது விகிதங்கள் அமலுக்கு வந்திருப்பதாகக் கருதப்படும்.

இதனால் மத்திய சர்க்காருக்கு வருடத்துக்கு சுமார் ரூ. 25 கோடி அதிகப்படி செலவாகும்.

கிராக்கிப்படி உயர்வினால் 25 லட்சத்திற்கு மேற்பட்ட மத்திய சர்க்கார் ஊழியர்கள் பயனடைவர்.

உயர்வு விவரங்கள் பின்வருமாறு:

ரூ. 60-க்கும், ரூ. 109-க்கு மிடையே சம்பளம் பெறுவோருக்கு இனி கிராக்கிப்படி ரூ. 38 ஆக இருக்கும்.

ரூ. 110-க்கும், ரூ. 149க்கு மிடையே சம்பளம் பெறுவோரின் கிராக்கிப்படி ரு. 58 ஆக இருக்கும்.

ரூ. 150-க்கும், ரூ. 209க்கு மிடையே உள்ள சம்பளங்களுக்கு ரூ. 76.

ரூ. 210-க்கும், ரூ. 399-க்கு மிடையே உள்ள சம்பளங்களுக்கு ரூ. 93.

ரூ, 400-க்கும் ரூ. 1000க்கு மிடையே உள்ள சம்பளங்களுக்கு ரூ. 100.

ரூ. 1000-க்கும், ரூ. 1100க்கு மிடையே உள்ள சம்பளங்களுக்கும் சில அனுகூலங்கள் கிடைக்கும்.

இன்று அறிவிக்கப் பட்டுள்ள கிராக்கிப்படி உயர்வு பல்வேறு சம்பள விகிதங்களிலுள்ளவர்களுக்கு ரூ. 5முதல் ரூ. 12வரை இருக்கிறது.

கடந்த 12 மாதங்களில் வாழ்க்கைச் செலவு சராசரி 10 புள்ளிகள் உயர்ந்ததை ஓரளவுக்கு சரிக்கட்ட சர்க்கார் ஒப்புக்

கொண்டிருப்பதால் இந்த உயர்வளிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வை சரிகட்ட மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் பணம் அளிப்பது இதுவே கடைசித் தடவையாக இருக்கக்கூடும்.

## புதிய ஏற்பாடு

யூனியன் நிதி மந்திரியை ராஜ்ய முதன் மந்திரிகள் பிப்ரவரி 2ஆம் தேதி சந்தித்த போது மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் படி எதிர்காலத்தில் ரொக்க உயர்வளிக்கும் தற்போதைய முறைக்குப் பதிலாக ஊழியர்களுக்கு உண்மையான பயனளிக்கும் புதியமுறை உருவாக்கப் படும்.

இரண்டாவது சம்பளக் கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு கடந்த 5 ஆண்டுகளில் மத்ய சர்க்கார் ஊழியர்களின் கிராக்கிப்படி ஆறு தடவை உயர்த்தப்பட்டு உள்ளது.

இரண்டாவது சம்பள கமிஷன் அறிக்கை அமலாக்கப் பட்டவுடன் ரூ. 300 வரை சம்பளம் பெற்ற ஊழியர்களுக்கு கிராக்கிப் படி. அப்பொழுதிருந்த கிராக்கிப் படி அடிப்படைச் சம்பளத் துடன் இணைக்கப்பட்டது. 1963 ஜுலை முதல் தேதி இரண்டாவது தடவை கிராக்கிப்படி மாற்றப் பட்டது. மூன்றாவது தடவையாக 1964 பிப்ரவரி முதல் தேதி அது மாற்றியமைக்கப் பட்ட போது ரூ. 600 வரை சம்பளம் பெறுவோருக்கும் அளிக்கப் பட்டது. 4-வது தடவை மாறுதல் 1964 அக்டோபர் முதல், தேதி செய்யப்பட்டது. ஐந்தாவது மாறுதல் 1965 மார்ச் முதல் தேதி செய்யப்பட்டது. அப்பொழுது ரூ. 1000 வரை சம்பளம் பெறுவோருக்கு கிராக்கிப்படி அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு தடவை கிராக்கிப் படி மாற்றியமைக்கப்பட்ட போதும் மத்ய சர்க்காருக்கு வருடத்துக்கு ரூ. 20 முதல் 25 கோடி வரை கூடுதல் செலவாகியது.

**கடந்த நவம்பர் முடிய கொடுக்கப்பட்ட கிராக்கிப்படியையும் படி உயர்வையும் கீழே காணலாம்.**

| சம்பளம் | கடந்த நவம்பர்முடிய கிராக்கிப்படி | டிசம்பர் 1லிருந்து கிராக்கிப்படி | உயர்வு |
|---|---|---|---|
| ரூ. 70—109 | 33 | 38 | 5 |
| ரூ. 110—149 | 50 | 58 | 8 |
| ரூ. 150—209 | 65 | 76 | 11 |
| ரூ. 210—399 | 81 | 93 | 12 |
| ரூ. 400—1000 | 90 | 100 | 10 |

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.